# கல்வெட்டு

இதழ் 22 ★ சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் ★ விலை ரூ. 1-50



286

காலாண்டு இதழ் (1989, மே திங்கள்)
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | கோயில் மரியாதை | —செ. போசு | ... | 1 |
| 2 | உளோம் போகீர் | —நடன. காசிநாதன் | ... | 4 |
| 3 | வைகைக்கரை ஆய்வு | —கே. எஸ். சம்பத் | ... | 9 |
| 4 | எசாலம் ஊர் ஆய்வு | —கி. ஸ்ரீதரன் | .. | 12 |
| 5 | பளி சாதனப் பட்டயம் | —எஸ். எம். கமால் | ... | 17 |
| 6 | பன்னாட்டார் பட்டயம் | —நடன. காசிநாதன் | ... | 25 |
| 7 | கள ஆய்வுப் பணிகள் | —வெ. வேதாசலம் | ... | 47 |


அட்டைப் படம்:
பல்லவர் காலத் துர்க்கை, கி.பி. 7-ஆம் நூற்றாண்டு, அழகூர்,
திருபெரும்புதூர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

சேர்க்கை எண். 2151
தொல்லியல் பக்கம். 230

# கோயில் மரியாதை ஒத்திப் பத்திரம்

செ. போசு, எம்.ஏ.
கல்வெட்டாய்வாளர்
திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை

மதுரை அருகே உள்ள கூத்தியார்குண்டைச் சேர்ந்த மு. பெரிய கருப்பன் ஆசாரி மகன் சின்னக்கருப்பன் ஆசாரி, சுப்பிரமணியன் ஆசாரி மகன் குருசாமி ஆசாரி முதலான இருவரும் திருப்பரங்குன்றம் கிராமத்தில் கொல்மிராசு (தச்சு வேலை-தேர் முதலியன) வேலை பார்த்து வந்தவர்கள்.

கி.பி. 1887-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ஆம் தேதி (தமிழ் சர்வசித்து ஆண்டு ஆடி மாதம் 23-ஆம் தேதி) அன்று இவர்கள் இருவரும் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கந்தசாமி ஆசாரி மகன் சுப்பன் ஆசாரி என்பவருக்கு ஒத்திப் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளனர்.

அந்த ஒத்திப் பத்திரத்தில், அவர்களுக்குப் பூர்வீக சொந்தமான மாகாணிப் பங்கு மிராசு வேலையை 1887-ஆம் ஆண்டு முதல் பத்து ஆண்டு காலத்திற்கு மூன்று ரூபாய்க்கு ஒத்தி வைத்திருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மிராசு வேலையை ஒத்தி வைத்துவிட்டபடியால், கிராம வேலை முதலானவற்றை ஆவலாதன்னியில் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும், மிராசு வேலை மூலம் வரும் வருமானம் அனைத்தையும் அனுபவித்துக் கொள்ளலாம் என்றும், திருப்பரங் குன்றம் கோயில் துப்பட்டா முதலான மாலை, சந்தன மரியாதை கள் எல்லாவற்றையும் சுப்பன் ஆசாரியே பெற்றுக் கொள்ளலாம் என்றும், கோயில் வேலை தாழ்வின்றி நடத்தல் வேண்டும் என்றும் அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று ரூபாயைத் திரும்பச் செலுத்தி மேற்கண்ட மரியாதை சுவந்திர வரும்படியை மீட்டுக் கொள்வோமென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

***இரண்டணா மதிப்புள்ள பத்திரத்தில் எழுதப்பட்ட இந்த ஒத்திப் பத்திரத்தில் 1887-ஆம் ஆண்டு பத்திரப் பதிவு துறையினரால் முத்திரை வைக்கப்பட்டுள்ளது.***

***இந்தப் பத்திரத்தின் சாட்சியாக கருமலையன் ஆசாரி என்பவர் குறிக்கப்படுகிறார். பத்திரம் எழுதியவர் குருசாமிப்பிள்ளை.***

***இப்போது இந்தப் பத்திரம் மதுரை ஆர். வி. பட்டியிலிருக்கும் குருசாமி ஆசாரி என்பவரிடம் உள்ளது.***

பத்திரம்

1 ௲அ௱அ௰எ ௵ ஆகஷ்ட்டு மீ ௲ ௳ க்கி தமிள் சருவசித்து ௵ ஆடி மீ உ௰௯ ௳ திருப்பறங் குன்றத்தி

2 லிருக்கும் கந்தசாமி ஆசாரி மகன் சுப்பநாசாரிக்கி கூத்தியார்குண்டிலிருக்கும் மு. பெரியகருப்ப

3 ஞசாரி மகன் சின்னக் கருப்பஞசாரி —க— சுப்பிரமணியஞசாரி மகன் குருசாமி ஆசாரி —உ— நாங்களிரண்டு

4 பேர்களும் எள்திக் கொடுத்த சம்மதி பத்திரம் திருப்பறங்குன்றங் கிராம சொல் மிராசு யெங்களுக்கு பூர்

5 வீக சொந்தமான மாகாணிப் பங்கு மிருசு வேலையை நாளது ௳ முதல் பத்து வருஷத்துக்கு ரூ ௯ ஒத்தி வைத்திருப்பதால் தானே கிரும

6 வேலை முதலானதை ஆவலாதையன்னியில் பார்த்துக் கொண்டும் ஷெடி மிருசுக்கு யேற்பட்டிருக்கும்

7 வரும்படி முதலானதையும் தானே அனுபவித்து வருவாயாகவும் திருப்பறங்குன்றம் கோவில் துப் பட்டா

முதலான மாலே சந்தண மரியாதைகளெல்லாம் தானே பெற்று வருவாயாகவும் கோவில் வே

9 லேயும் யாதொரு தாள்வன்னியில் பார்த்து வருவாயாகவும் ஷெ ஷூ சென்றதின் பேரில் மேலே கண்ட

10 ரூ ரு யும் தன்னிடம் செலுத்தி மேல்க்கண்ட மரியாதை சுவந்திர வரும்படியை

11 மீட்டுக் கொள்வேனுகவும் ரு வது வரிக்கிமேல் —மச— அக்ஷரம் வரிப் பிளந்து எளிதியும்

12 எ வது வரியில் —ரு— அக்ஷரம் அடித்தும் ஷெ வரிக்குமேல் -துப்ப- எளிதியாகிரது

13 இந்த படிக்கி சின்னக் கறுப்பனுசாரி குருசாமி ஆசாரி

14 சாட்சி கருமலேய்யன் ஆசாரி

15 என்தினது குருசாமிப் பிள்ளே

★

# உளோம் போகீர்

**நடன. காசிநாதன்**, எம்.ஏ.,
துணை இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை

சென்னை வாழ் மக்களை, உங்களுக்குத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது என்று கேட்டால் 'புழலேரியிலிருந்து' என்று கூறுவார்கள். ஆனால் அப்புழலேரிக்குத் தண்ணீர் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்துதான் கிடைக்கிறது. சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு பூண்டி என்று வழங்கப்படும் இவ்வூர் அங்கு இருந்ததில்லை. இன்று உள்ள நீர்த்தேக்கப் பகுதியில் சில ஊர்கள் இருந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று வெண்பாக்கம். இவ்வூர் இறைவன் 'வெண்பாக்க நாதர்' என்றும், இறைவி 'கனிவாய் மொழி' என்றும் அழைக்கப் பட்டனர்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரில் சங்கிலியாருக்குக் கொடுத்த உறுதிமொழியை மறந்து அவரைப் பிரிந்து திருவொற்றியூரிலிருந்து வடதிருமுல்லைவாயில் செல்லுகையில் கண் பார்வையிழந்தார்.

பின்னர், வடதிருமுல்லைவாயிலை விட்டு நீங்கி திருப்பாசூர் சென்றடைந்தார். அங்கிருந்த இறைவன் பாசூர்நாதர் இறைவி பசுபதி நாயகி ஆகியோரை வணங்கிவிட்டுத் திருவெண்பாக்கத்தை அடைந்தார்.

திருவெண்பாக்கத்திலிருந்த வெண்கோயில் நாதனை வணங்கி

" பிழையுளன பொறுத்திடுவர்
  என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
  படலமென்கண் மறைப்பித்தாய்
குழை விரவு வடிகாதா
  கோயிலுளாயோ என்ன

உமையுடையான் உள்ளிருந்து
'உளோம் போகீர்' என்றானே

" மான் திகழுஞ் சங்கிலியைத்
தந்து வரு பயன்களெல்லாம்
தோன்றவருள் செய்தளித்தாய்
என்றுரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில்
இங்கிருந்தாயோ வென்ன
ஊன்றுவதோர் கோலருளி
'உளோம் போகீர்' என்றானே"

என்று பாடி, இறைவன் தந்த ஊன்றுகோலினைப் பெற்று மேலும் தம் பயணத்தைச் சுந்தரர் தொடர்ந்தார் என்பதாக வரலாறு. இச் செய்தி திருத்தொண்டர் புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் வரலாற்றில்,

"வணங்கி நீர் மகிழ் கோயிலுளீரேயென்ற வன்றொண்டர்க் கூன்றுகோலருளியிணங்கிலாமொழியா லுளோம் போகீரென்றியம்பி னாரேதிலார் போல" என்று பேசப்படுகிறது.

சுந்தரர், பார்வையிழந்தவராய் இப்பதிக்கு வந்து இறைவனை இங்கிருந்தாயோ என்று கேட்டபொழுது 'உளோம் போகீர்' என்று இறைவன் கூறிய அத்திருவாய்மொழியே நாளடைவில் வெண்பாக்கத் துக்கு, மாற்றுப் பெயராக அமைந்து, 'திருவுளோம் போகீர்' என்றும் இறைவன் 'கோல் கொடுத்த நாதர்' என்றும் வழங்கி பின்னாளில் திருவுளம்பூதூர் என்று மருவி வழங்கலாயிற்று.

கோல் கொடுத்த நாதர் கோயில் இன்று ஊன்றீஸ்வரர் ஆலயம் என்றுஅழைக்கப்படுகிறது. இக்கோயில் ஒவ்வொரு ஆண்டும் நீரில் மூழ்கி மூழ்கி உயிர் பிழைக்கிறது. கோடைக் காலத்தில் மட்டுமே இக்கோயிலை மக்கள் காண முடியும். மற்ற நாட்களில் நீரால் மூழ்கடிக்கப்பட்டிருக்கும்.

கிழக்குப் பார்த்து நிற்கும் இக்கோயிலில் அர்த்த மண்டபம், உண்ணாழி ஆகிய பகுதிகள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. மற்ற பகுதிகள் காலப்போக்கில் அழிந்து விட்டன.

கூரைப் பகுதியில் கூடுகள் காணப்படுகின்றன. அவற்றின் நடுவில் உள்ள உருவம், சாளரத்தில் முகத்தை மட்டும் வைத்து எட்டிப் பார்ப்பது போன்று தோற்றமளிக்கிறது. சுவற்றில் அரைத் தூண்கள் காணப்படுகின்றன. அரைத் தூணின் அமைப்பும், அதிஷ்டானத்தின் அமைப்பும் இக்கோயில் சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப் பெற்றிருக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றன.

இதனை மெய்ப்பிக்கும் வண்ணம் இங்குள்ள கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கோயிலிலிருந்து 22 கல்வெட்டுகள் 1939 லிருந்து 1943 வரையிலான காலத்தில் மத்திய அரசு கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டிருக்கின்றன. சோழ மன்னர்களில் முதலாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன் இராஜராஜன் (இரண்டாம் இராஜராஜனா அல்லது மூன்றாம் இராஜராஜனா என்பது தெரியவில்லை) மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்தில் இக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

தற்போதுள்ள கோயில் சோழ மன்னர்கள் காலத்தில் எத்தகைய சிறப்புப் பெற்றிருந்தது என்பதைக் கல்வெட்டுகள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சில தனிப்பட்டவர்கள் மலைக்கினிய நின்றான், நல்லாடியைச் சேர்ந்த குனிக்கும்பிரான் ஆகியோர் நுந்தாவிளக்கு எரிப்பதற்காக பொன் கொடை அளித்துள்ளார்கள்.

விக்ரம சோழன் காலத்தில் சோழ மண்டலத்து குலோத்துங்க சோழ வள நாட்டு, செற்றூர்க் கூற்றம் இடைக் குறும்பூரைச் சார்ந்த அய்யன் இராசஇராச தேவன் என்பான், இக்கோயிலில் பூசை நைவேத்தியத்துக்காக அளித்த நிலத்துக்கு இவ்வூரார் (ஊர்ச் சபையினர்) வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் இவ்வூர் 'திருவுளம் போகி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இராஜராஜ தேவர் காலத்தியக் கல்வெட்டில் இறைவன் ''திருவுளம்போகி உடையார்'' என்று

அழைக்கப்படுகிறார். இம்மன்னன் காலத்திய மற்றொரு கல்வெட்டில் மலை மண்டலத்தில் உள்ள நென்மலிசேரியைச் சார்ந்த நாராயணசங்கரன் என்பான் பசுக்களை இக்கோயிலுக்குத் தானமாக அளித்ததைக் காண முடிகிறது.

திரிபுவன வீரதேவனான மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில், புழல் கோட்டம், பாடி என்னும் ஊரைச் சேர்ந்த கயிலாயமுடையான் தம்பிரான் தோழன் என்னும் வணிகர் இக்கோயிலில் உம்பர்தனி துணைப் பெருமான், அவர் தேவி மற்றும் விநாயகப்பிள்ளையார் ஆகியோர் செப்புப் படிமங்கள் செய்தளித்து அவைகளுக்கு நாள் தோறும் பூஜை செய்வதற்காக 2000 குழி நிலத்தைக் கோயில் தானத்தாரிடம் ஒப்படைத்து பூசை நித்தமும் நடைபெற்று வர ஏற்பாடு செய்ததைத் தெரிவிக்கிறது. சுந்தரருக்குத் தம்பிரான் தோழன் என்று பெயர் உண்டு. அவர் மீது அடங்காப் பற்று கொண்டவர் போலும் இக்கொடையாளியான கைலாய முடையான் தம்பிரான் தோழன். இராஜராஜன் காலத்தில் இக் கோயிலுக்குத் திருமடைவிளாகமும், தோட்டமும் ஏற்படுத்தப் பட்டன என்பதை மற்றொரு கல்வெட்டு புலப்படுத்துகிறது.

குலோத்துங்கன் காலத்துக்கு முன்பிருந்ததும், சுந்தரரால் வழி படப்பட்டதுமான பழமையான ஆலயம் சிதிலமடைந்ததால் குலோத்துங்கன் காலத்தில் தற்போதுள்ள கோயில் எழுப்பப் பட்டிருத்தல் வேண்டும். ஆதலால்தான் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் அளித்த மறுமொழிச் சொல்லான "உளோம் போகீர்" என்ற சொல்லே இவ்வூருக்கும் இறைவனுக்கும் பெயராகச் சோழர் காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் 'திருவுளம் போகி' என்றும் இறைவன் பெயர் "திருவுளம்போகி உடையார்" என்றும் காணப் பெறுகின்றன. இதன் மூலம் அக்காலத் தமிழ் மக்கள் சைவ நாயன்மார்களிடம் எத்தகைய மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதும், இலக்கியமும் கல்வெட்டுகளும் எந்த அளவுக்கு ஒற்றுமையுடையனவாக, உண்மையைக் கூறத் தக்கனவாக உள்ளன என்பதும் உணரற்பாலது. தேவாரத் திருப்பதிகங்களை யும் ஆழ்வார்களது திருப்பாசுரங்களையும், கல்வெட்டுகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தோமானால், இன்னும் இது போன்ற பல

ஊர்கள், இறைவன் பெயர்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு இன்புறலாம்.

குலோத்துங்கன் காலத்துக்கு முன்னமேயே இங்கே கோயில் இருந்ததற்குக் கல்வெட்டு ஆதாரமும் கிடைத்துள்ளது. திருவிளம்பூதூரில் ஒரு இடத்தில் பலகைக் கல்லில் இராட்டிரகூட மன்னன் கன்னரதேவனின் கல்வெட்டு ஒன்று படியெடுக்கப்பட்டுள்ளது. அதில் அவ்வூரிலிருந்த திருக்கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்காக 45 ஆடுகள் தானமாக வழங்கியது எழுதப்பட்டுள்ளது. கன்னரதேவன் முதலாம் பராந்தகச் சோழனின் சம காலத்தவன். அதாவது கி.பி 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். ஆதலால் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் திருவிளம்பூதூரில் கோயில் இருந்தமை தெரிய வருகிறது, அதுமட்டுமல்லாமல், தற்போதுள்ள குலோத்துங்கன் காலக் கோயிலுக்கு அருகில் செங்கற்கள் குவியலில் ஒரு துர்க்கையின் சிற்பம் இடுப்புப் பகுதிக்கு மேல் உடைந்த நிலையில் கிடக்கிறது. துர்க்கை எருமைத் தலை மீது நின்ற நிலையில் வலப்பக்கம் மான் ஒன்றோடு காணப்படுகிறது. இதன் சிற்ப அமைதியினைப் பார்க்கையில் பிற்காலப் பல்லவர் காலத்தைச் சார்ந்ததாகத் தெரிகிறது. எனவே பிற்காலப் பல்லவர் காலத்திலேயே இங்கு கோயில் இருந்திருக்கலாம் என்று ஊகிப்பதற்கு இச்சிற்பம் உறுதுணையாகிறது. சுந்தரர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது. அவர் இங்குள்ள கோயிலுக்கு வருகை புரிந்துள்ளார் எனில் பல்லவர் காலந் தொட்டு இவ்வூரில் கோயில் இருந்தமை நன்கு புலப்படும்.

பூண்டி நீர்த்தேக்கத்தின் நடுவில் உள்ள இவ்வூன்றீஸ்வரர் கோயிலை மேட்டுப் பகுதிக்கு அப்படியே பெயர்த்து அமைக்கத் தக்க ஏற்பாடுகளைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

★

# வைகைக்கரை ஆய்வு

கே. எஸ். சம்பத் எம். ஏ.,
வ. மு. அகழ்வாய்வாளர்
சென்னை

மதுரை மாவட்டம் வைகை ஆற்றங்கரையில், முல்லைப் பெரியாறு தொடங்கி இராமநாதபுரத்துக்கு அருகில் கடலில் ஆறு கலக்கும் இடம் வரையில் தொல்லியல் ஆய்வினை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை மேற்கொண்டுள்ளது. அண்மையில் வைகை ஆறு கடலில் புகும் இடத்தில், அழகன்குளம் என்ற ஊரில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வகழ்வாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ரோமானியப் பேரரசுடன் தமிழகம் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு வெளிப்பட்டதை அடுத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வைகை ஆற்றங்கரையில் ஒரு சில ஊர்களில் வரலாற்றுக்கு முற்பட்டகாலச் சின்னங்களும், தடயங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. வைகை ஆறு பாண்டியப் பேரரசின் வரலாற்றோடு இணைந்து முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. பண்டைய ஆறாகிய வைகை தமிழ்ப் பண்பாட்டுக்கு வழங்கியுள்ள செழுமையையும் வாழ்க்கையையும் ஆய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

மதுரை மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் கேரள மாநில எல்லையினையொட்டி கம்பம் பள்ளத்தாக்கும் அதனையடுத்து ஊர்களும் அமைந்துள்ளன. இப்பள்ளத்தாக்கினை, சுருளி மலையும், ஏல மலையும் இவை அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையும் சூழ்ந்துள்ளன. இப்பள்ளத்தாக்கினைப் பெரியாற்றிலிருந்து நீரைப் பெறும் முல்லையாறும், சுருளியாறும், இரவங்கலாறும் மற்றும் சுரங்கனாறும் பாய்ந்து வளப்படுத்துகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து குமுளிப் பகுதியிலிருந்து தொடங்கும் முல்லையாற்றோடு - சுருளியாறும், பிற ஆறுகளும் இணைந்து ஒன்றாகச் சேர்ந்து வைகையாற்றோடு

சேர்கின்றன. முல்லையாற்றுப் படுகையும் அதனையொட்டியுள்ள ஊர்ப் பகுதிகளும், முல்லையாறு தொடங்குகின்ற பகுதியிலிருந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் பலவிடங்களில் நுண் கற்கால மனிதன் வாழ்ந்தமைக்கான தடயங்களும், பெருங் கற்கால மனிதன் வாழ்ந்தமைக்கான தடயங்களும் கண்டறியப்பெற்றன,

### குள்ளப்ப கவுண்டன்பட்டி

முல்லையாற்றின் கீழ்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. இப் பகுதியில் கற்பலகைகளுக்கிடையில் (cist burial) புதைக்கப் பெற்ற முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. குள்ளப்ப கவுண்டன் பட்டியில் முல்லையாற்றில் கட்டப்பெற்ற கல்லணைப் பகுதியில் ஆற்றுப் படுகைகளில், அருகிய அளவில் நுண்கற்காலக் கருவிகள், (microlithic tools) கிடைக்கப் பெறுகின்றன. இப்பகுதியில் நுண் கற்காலக்கருவி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

### சுருளிப்பட்டி

முல்லையாற்றின் படுகையில் அமைந்துள்ள இவ்வாற்று படு கையில் அருகிய அளவில் நுண்கற்காலக் கருவிகள் செய்யப் பயன்படுத்தப் பெற்ற மூலக் கற்களும் (cores), சில்லுகளும் (flakes) கண்டெடுக்கப்பட்டன.

### எல்லைப்பட்டி

முல்லையாற்றின் மேல்கரையில் அமைந்துள்ள ஊர் எல்லைப் பட்டியாகும். இப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டு வரலாற் றில் குறுப்பிடத்தகுந்த சான்றுகள் கிடைக்கப்பெற்றன. இவ்வூரின் கீழ்ப்புறம் முல்லையாற்றினையொட்டியுள்ள புஞ்சை நிலப்பகுதி களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருந்து மறைந்தமைக் கான தடயங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இப்பகுதிகளில் நிலத்தினை அகழ்ந்து நான்கு புறமும் கற்பலகை களை அமைத்து, இடையில் முதுமக்கள் தாழி வைக்கப்பெற்று அதன்மீது மற்றொரு கற்பலகையினை வைத்து மூடி எழுப்பப் பெற்ற பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் (cist burial with porthole) ஏராளமாக இப்பகுதிகளில் இருந்திருப்பது ஆய்வின்போது அறியப் பெற்றது.

குறிப்பாக எல்லப்பட்டியில் இரும்பு உருக்குவதற்காக பயன் படுத்தப் பெற்ற சுடுமண்குழாய்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை உலையில் இட்டு இரும்பை உருக்குவதற்காக காற்றடிக்கும் துருத்திக் குழாய்களாகும். மிக அதிக வெப்பநிலையில் இரும்புக் கனி உருக்கப்படும்போது தீப்பகுதியில் இருந்த குழாய்களின் முனை கள் உருகி இரும்புத்தாதுக்களோடு காணப்படுகின்றன. ஈமத்தாழி களையும் ஈமச்சின்னங்களையும் தோற்றுவித்தவர்கள் திராவிட மொழியினர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. அவர்கள் இரும்பை உருக்கி ஏராளமான கலங்களை பயன்படுத்தினர். அந்தப் பகுதியி லேயே இக்குழாய்கள் கிடைப்பது, இக்கிராமப் பகுதிகளில் இரும்பை உருக்கும் தொழில் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்ன தாகவே, பரவலாக வழக்கில் இருந்ததென இச்சுடுமண் குழாய்கள் மூலம் அறிய முடிகிறது. இரும்பு எடுத்தது போக எஞ்சியுள்ள கனிமப் பொருள்கள் (iron slags) இவற்றின் அருகே கிடைத் துள்ளன.

முல்லையாறு தொடங்கப் பெறும் பகுதியில் இருந்து ஆற்றுப் படுகைகளில் மேற்பரப்பு ஆய்வினை மேற்கொண்டதில் இவ் வாற்றங்கரையில் நுண்கற்காலம் முதல் (from mesolithic or Microlithic Age) மனிதர்கள் தொடர்ந்து வாழ்ந்திருப் பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.

குறிப்பாக இப்பள்ளத்தாக்குப் பகுதியில் அமைந்துள்ள காமயக் கவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, கூடலூர், சாம்பல் மேடு, ஆகிய பகுதிகளில் ஏராளமான அளவில் முதுமக்கள் தாழி கள் புதைக்கப் பெற்றமைக்கான தடயங்கள் கிடைக்கப் பெற்றன. தொடர்ந்து இப்பகுதியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாய்வில் மேலும் பல வரலாற்றுக்கு முற்பட்ட கால சான்றுகள் வெளிப்படலாம். தொடர்ந்து வரும் இதழ்களில் ஆய்வின் மூலம் அறியப்பட்ட விவரங்கள் தொடர்ந்து வெளிவரும்.

★

# எசாலம் ஊர் ஆய்வு

கி. ஸ்ரீதரன் எம். ஏ.,
அகழ்வாய்வாளர்
தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை-28

எசாலம் என்ற ஊர் விழுப்புரம் வட்டத்தில் விழுப்புரம்-செஞ்சி சாலையில் நேமூர் என்ற ஊரிலிருந்து சுமார் 10 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள இராமநாத ஈசுவரர் கோயிலில் தென்கிழக்கு மூலையில் திருப்பணி வேலைக்காகத் தரையைச் சமம் செய்யும்பொழுது பூமிக்கடியிலிருந்து பல செப்புத் திருமேனிகளை யும், செப்பேடு ஒன்றையும் திருப்பணிக் குழுவினரும் ஊர் மக்களும் கண்டெடுத்தனர்.

இங்கு கிடைத்த செப்பேடும், செப்புத் திருமேனிகளும் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் டாக்டர். இரா. நாகசாமி அவர்களால் ஆய்வு செய்யப்பட்டன.

பின்னர் இங்கு கிடைத்த செப்புத் திருமேனிகளைத் தூய்மை செய்யவும், இவ்வூரில் தொல்லியல் ஆய்வு செய்யவும் இத்துறை அகழ்வாய்வாளர், இரசாயனர், நிழற்படம் எடுப்பவர்கள் ஆகியோர் அடங்கிய குழு சென்றது.

## கோயில் அமைப்பு

கோயில் கிழக்குத் திசையை நோக்கி அமைந்துள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டு விளங்குகிறது. நுழைவுவாயில் மகாமண்டபத்தின் இடது பக்கமாக அமைந்துள்ளது. மகாமண்டபத்தில் தெற்குத் திசை நோக்கி அம்மன் சந்நிதி உள்ளது. கருவறையின் தேவகோட்டங் களில் இடமிருந்து வலமாக வினாயகர், தட்சிணாமூர்த்தி, திருமால், பிரம்மா, துர்க்கை ஆகிய தெய்வங்களின் சிற்பங்கள் காணப் படுகின்றன. விமானம் முழுவதும் கருங்கற்களாலேயே கட்டப்

பட்டுள்ளது. விமானத்தின் கழுத்துப் பகுதியில் கிழக்குப் புறத்திலிருந்து இந்திரன் (கிழக்கு) தட்சிணாமூர்த்தி (தெற்கு) திருமால் (மேற்கு) பிரம்மா (வடக்கு) ஆகிய தெய்வங்களின் சிற்பங்களும் விமானத்தில் உள்ள கிரீவங்களில் நடராஜர் (தெற்கு), சோமாஸ்கந்தர் (கிழக்கு) வடக்கில் பிரம்மா ஆகிய தெய்வ சிற்பங்களும் காணப்படுகின்றன. மேற்குப் புறத்தில் சிற்பங்கள் ஏதுமில்லை.

### கல்வெட்டுக்கள்

இக்கோயிலின் சுவரில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கல்வெட்டுக்களில் இவ்வூர் 'எய்தார்' என்றும் இறைவன் பெயர் 'திருவிஇராமதேவர்' என்றும் குறிக்கப்படுகின்றன. பனையூர் நாட்டுத் 'தனியூர் ராஜராஜ சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்பட்ட பகுதிகளில் எசாலம், பிரம்மதேசம், எண்ணாயிரம் ஆகிய ஊர்கள் அமைந்துள்ளன.

### எசாலம் செப்பேடு

செப்பேடு 15 செப்புத் தகடுகளுடன் ஒரு வளையத்தில் முத்திரையுடன் காணப்படுகிறது. முத்திரையின் நடுவில் அமர்ந்த நிலையில் ஒரு புலியும், அருகில் இரண்டு மீன்களும் உள்ளன. கீழே ஒரு வில்லும் அதற்கு அடியில் ஒரு பன்றியும் அவற்றோடு சுவஸ்திகம், தாமரை மலர் போன்ற சின்னங்களும் உள்ளன. சோழர், பாண்டியர் சேரர்களுடைய இலச்சினையான புலி, இரு மீன்கள், வில் ஆகியவை காட்டப்பட்டுள்ளன. பன்றி சாளுக்கியர்களுடைய சின்னம். இவ்வனைத்து நாடுகளையும் இராஜேந்திர சோழன் தன்னுடைய ஒரு குடைக்கீழ் ஆண்டான் என்பதை இம்முத்திரைக் காட்டுகிறது. குடையின் இரு மருங்கும் சாமரங்களும், குடையின் மேல் ஒரு சக்கரமும் காணப்படுகின்றன. முத்திரையின் விளிம்பில் 'பரகேசரி வர்மனாகிய ராஜேந்திர சோழன் ஆணை இது' என்று கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

முதலாம் இராசேந்திர சோழனின் 24-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1036) வெளியிடப்பட்ட இச்செப்பேட்டில் மற்ற செப்பேடுகளைப் போலவே முதலில் சமஸ்கிருதப் பகுதியும் அடுத்து தமிழ் மொழிப் பகுதியும் உள்ளன. இராசேந்திர சோழனின் குருவான

சர்வசிவப் பண்டிதர் என்பவர் எசாலம் கோயிலைக் கட்டினார் என்பதையும் அதற்கு இராசேந்திர சோழன் அளித்த நிபந்தம் மற்றும் அரசு ஆணையின் விவரத்தையும் இச்செப்பேடு குறிக்கிறது. மேலும் தஞ்சாவூரில் இராசராச சோழன் பெரிய கோயிலைக் கட்டியதையும் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டியதையும் இச்செப்பேடு கூறுகிறது.

செப்பேட்டுடன் விநாயகர், நடன விநாயகர், அம்மன், ஞானசம்பந்தர், அப்பர், பாசுபதமுர்த்தி, சந்திரசேகரர், துர்க்கை, பைரவர், சூரியன், பெருமாள், திருமகள், ஆழ்வார், கல்யாணசுந்தரர் மான், அஸ்திரதேவர் மற்றும் பூஜை பாத்திரங்கள், முக்காலி மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன. இவை அனைத்தும் தூய்மை செய்யப்பட்டு நிழற்படங்கள் எடுக்கப்பட்டன.

**ஊர் ஆய்வு**

ஊரின் தெற்கே லிங்கத்தடிமேடு என்ற இடத்தில் ஏரிக்கரையின் மேல் முதுமக்கட் தாழிகள் புதைந்து காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன.

மேலும் இங்கு ஒரு நிலத்தில் உழும்பொழுது செங்கற்கள் கிடைத்ததாக ஊரார் கூறினர். அங்கு சென்று ஆய்வு செய்யப்பட்டு செங்கற்கள் கண்டெடுக்கப்பட்டன. அச்செங்கல்லின் அளவு நீளம் 36 செ. மீ. அகலம் 37 செ. மீ. ஆகும். இங்கு மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்த சுடுமண் பொம்மைகளான குதிரையின் தலைப்பகுதிகள், பொம்மைகளின் பகுதிகள், விளக்குகள் ஆகியவை கிடைத்தன. எனவே இப்பகுதியில் கிராம தேவதையின் கோயில் இருந்து அழிந் திருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது

மேலும் இப்பகுதியிலிருந்து எடுத்து வரப்பட்டு தற்பொழுது இராமநாதசுவரர் கோயிலின் அருகில் காணப்படும் (தலைப் பகுதி இல்லை) திருமால் சிற்பம் கி.பி. 8-9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தாகக் கொள்ளலாம். சுடுமண் பொம்மைகள் கிடைக்கும் பகுதிக்கு அருகே சப்த மாதர் சிற்பங்களில் நான்கு சிற்பங்கள் வாய்க்கால் கரை மேல் புதைந்து காணப்படுகின்றன.

## ஈசுவரமானியக் கல்வெட்டு

லிங்கத்தடி மேட்டுக்குச் செல்லும் வழியில் ஈசுவரமானியம் என அழைக்கப்படும் நிலத்திற்கு அருகில் சூலக்கல் ஒன்று காணப் படுகிறது. அதில் சூலம் ஒன்றும் அதன் இருபுறமும் கல்வெட்டுக் களும் காணப்படுகின்றன.

**கல்வெட்டு :**

| | |
|---|---|
| தேவர் | ஸ்ரீ காம |
| போகம் | தெவன் |
| அழகன் | செய்கை |
| வைத் | |
| தபொன் | |

இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு பார்த்தால் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

எனவே மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளால் எசாலம் கிராமம் மிகவும் பழமையான வரலாற்றுச் சிறப்பு மிக்க கிராமம் என்பதை அறிகிறோம்.

## பிரம்மதேசம்

எசாலம் கிராமம் அருகில் உள்ள பிரம்மதேசம்என்ற ஊர் ஆய்வு செய்யப்பட்டது. கோயில்கள் நிழற்படங்கள் எடுக்கப்பட்டன. பிரம்மதேசம் பாடலீசுவரர் கோயில் முழுவதும் செடிகள், மரங்கள் முளைத்துப் பாழடைந்துக் காணப்படுகின்றன. நுழைவு வாயில் வேலைப்பாடு மிகுந்து காணப்படுகிறது. அதில் நடுவில் விநாயகரும் இருபுறமும் இரு விளக்குகளும் நந்திகளும் செதுக்கப்பட்டுள்ளன. பிரம்ம தேசத்தில் உள்ள பிரம்மீசுவரர் கோயிலும் பார்வையிடப் பட்டது.

இவ்வூரில் வாழ்வந்தி அம்மன் என்ற கிராமக்கோயில் உள்ளது. காளி தன் எட்டுக் கரங்களில் வாள் கலப்பை, கேடயம், குறுவாள் மணி போன்ற ஆயுதங்களை ஏந்தி இடது காலை மடக்கி வலக் காலைத் தொங்கவிட்ட நிலையில் அமர்ந்திருக்கிறாள். இச்சிற்பம் கி.பி.12, 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**எண்ணாயிரம்**

எண்ணாயிரம் ஊர் ஆய்வு செய்யப்பட்டது. ஊரின் தென் கிழக்கே ஓடைப்பிள்ளையார் கோயில் மேட்டில் லிங்கம் ஒன்று இருப்பதாக ஊரார் கூறினர். அந்த இடம் சென்று ஆய்வு செய்யப்பட்டது. வயல்வெளியில் மேடை போன்ற அமைப்பின் மீது பெரிய லிங்கம் ஒன்று காணப்படுகிறது.

இதிலிருந்து கற்களையும் இங்கு கிடைத்த நடராஜர் சிலையையும் அருகில் உள்ள மயிலம் கோயிலுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு எடுத்துச் சென்று விட்டதாகக் கூறினர்.

இவ்வூரின் எல்லையில் செல்லியம்மன் கோயில் உள்ளது இங்கு வீரபத்திரர், மகேஸ்வரி, இந்திராணி, பிராமி, வைஷ்ணவி, வராகி, சாமுண்டா, விநாயகர், சேட்டை சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இக்கோயிலின் எதிரில் சுமார் 1 மீ. உயரம் உள்ள பலகை கல்லில் கல்வெட்டுக் காணப்படுகின்றது. இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

எண்ணாயிரம் கிராமத்தில் தொல்லியல் ஆய்வு மே மாதம் (1988) தொடர்ந்து நடத்தப்பட்டது. இக்கிராமத்தில் காணப்படும் அம்பலமேடு, கடப்பனேரிமேடு, காட்டேரிமேடு ஆய்வு செய்யப்பட்டன. அம்பலமேட்டிலும், கடப்பனேரிமேட்டிலும் சிவலிங்கமும், நந்தியும் காணப்படுகின்றன. காட்டேரி என அழைக்கப்படும் ஏரியின் அருகில் காணப்படும் மேட்டில் பூமியில் பாதி புதைந்த வண்ணம் பிரம்மாவின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. அருகில் துவாரபாலகர் சிற்பத்தின் கால் பகுதியும் புதைந்து காணப்படுகிறது. இச்சிற்பங்கள் அனைத்தும் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இப்பகுதியை ஆய்வு செய்தால் பண்டைய கோயில் வெளிப்பட வாய்ப்புண்டு.

இப்பகுதியில் விரிவானத் தொல்லியல் ஆய்வு செய்தால் மேலும் பல வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கக்கூடும்.

★

# பனி சாதனப் பட்டயம்

**எஸ். எம். கமால்**
*இராமநாதபுரம்*

*மறவர் சீமை மன்னர்களில் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவர் கிழவன் என்ற இரகுநாதசேதுபதி (கி. பி. 1674-1710). அரசியல் சாதனைகளால் சேது நாட்டிற்குச் சிறப்பை ஏற்படுத்தியவர். டச்சுக்காரர்கள் இந்த மன்னரது தயவிற்காகக் காத்து நின்றனர். சிவந்தெழுந்த பல்லவராயன் இவரது சீற்றத்தினால் அழிந்தார். நாயக்க மன்னர் சொக்கநாதரை நயவஞ்சகமாகச் சிறையில் அடைத்துவைத்த கலகக்காரன் ருஸ்தும்கானை அழித்து மன்னரைச் சிறைமீட்டு மதுரைப் பேரரசை நிலைநிறுத்தியவர். தொல்லைகள் தந்த இராணி மங்கம்மாளது படைகளையும், தஞ்சை மன்னர் ஏக்கோஜி படைகளையும் நிர்மூலம் செய்து தமது நாட்டின் வடக்கு எல்லையைச் சோழ நாட்டிற்குள்ளும் விரிவுபடுத்தியவர். 'பரராஜகேசரி' என்ற விருதினால் சிறப்படைந்தவர்.*

*அவரது ஆட்சிக்குள் அமைந்திருந்த குடிமக்களுள் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நிலைத்து நின்றவர்கள் வலையர் என்ற பிரிவினர். இவர்களைத் தமிழகத்தின் தொன்மைக் குடியினர் என மதுரைச்சீமை வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். காட்டில் விலங்குகளைப் பிடிக்கவும், கடலில் மீன்களை வளைக்கவும், வலை வீசுவது இவர்களது தொழிலாக இருந்தது. இந்தப் பழங்குடியினர் இராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் இருந்து வந்ததை அரசின் மக்கட் கணிப்பு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவர்கள் அம்பலக்காரர்கள், சேர்வைக்காரர்கள், வேடர்கள், குருவிக்காரர்கள் எனவும் ஆங்காங்கு வழங்கப்பட்டனர். அவர்களது நாட்டாண்மை 'பிள்ளை' 'மூப்பன்' என்று அழைக்கப்பட்டார். திருச்சிராப்பள்ளிச் சீமையில் செல்வாக்குடன் விளங்கிய வலையர் ஒருவர் கிறித்துவமத பாதிரியார் மீது பொய்வழக்குத் தொடர்ந்து சொக்கநாத நாயக்கரிடம் முறையீடு செய்ததை மதுரை நாயக்க வரலாற்றில் காணலாம். சேதுபதி சீமையில் வாழ்ந்த இத்தகைய மீனவர்களிடம் கி.பி. 1691-இல் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டது.*

வேளான்தரவை கிராமம் வீரப்பன் மகனுடைய மகள் வீராயி என்ற கன்னி, இளமநேரி கிராமத்தில் மூப்பனார் வளவில் குடியிருந்து வந்தாள். அப்பொழுது அவளுக்கும் நயினாக்குட்டி சேர்வைக்காரன் என்பவனுக்கும் ஏற்பட்ட களவொழுக்கத்தில் அவள் கர்ப்பவதியானாள். இதனையறிந்த 'சாதியாரும், தாய், தகப்பன், அண்ணன், தம்பி' ஆகியோரும் அவளைக் கண்டிச்சு தெண்டித்ததில் உயிர்வதையாகி விட்டது. அத்துடன் ஆறுதலடையாத வலையக் குடியினர், வீராயியின் காதலன் நயினாக்குட்டி சேர்வைக்காரனை சேதுபதி மன்னர் அவையில் நிறுத்திப் பழி சுமத்தினர். இறந்து போன வீராயிக்குப் பழிக்குப் பழி கோரினர். அவர்களது ஞாயத்தை துரையவர்களும் விளங்கி நயினாக்குட்டி சேர்வைக்காரனைப் பழிக்கு பழி குடுக்கச் சொல்லி உத்திரவாகியது.

அடுத்து நயினாக்குட்டி சேர்வைக்காரன் அவனது தங்கை உடையக்காளை வலையர்களிடம் ஒப்படைத்தான். அவர்கள் இறந்து போன வீராயியை ஒரு சிதையிலும், உடையக்காளை மற்றொரு சிதையிலும் வைத்து தீ வைத்தனர். ஆம்! கொடுமையிலும் கொடுமை. "பலிக்குப் பலி" எனத்துடித்த பேதை உள்ளங்களில் நொடி நேரத்தில் மனமாற்றம் ஏற்பட்டது. வலையர்களில் முதியவர்களான 'மூப்பன் மார்கள்' நம்முடைய பிள்ளைக்குப் பிள்ளை வந்ததென்று உடையக் காளை சிதையை விட்டு கீழே இறக்கி, அவளைச் "சாதிப்பிள்ளையாக" ஏற்றுக் கொண்டனர். ஏற்கனவே அவள் அகமுடையார் சாதியினராக இருந்ததால் இப்பொழுது அவளை "வலையச் சாதிப் பிள்ளை"யாக வரித்துக் கொண்டனர். சாதிப்பிள்ளையான உடையக் காளுக்கு வலையர் சமூகத்தில் சிறப்பான தகுதியும் சலுகைகளும் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சி நடந்து முன்னூறு வருடங்களாகி விட்டன. ஆனால் இந்த நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ள செப்பேடு ஒன்று சென்ற ஆண்டுதான் கிடைத்தது. சேதுபதி மண்ணில் அன்று நிலவிய சமுதாய நீதியைச் சுட்டுகின்ற இந்தச் செப்பேட்டில் வலையர்கள் சார்ந்துள்ள எட்டுக்கிளைகளது பெயர்களும் அவர்கள் குடியிருப்புகள் அமைந்துள்ள இருபத்து ஐந்து ஊர்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஊர்களில் நான்கு ஐந்து ஊர்களைத் தவிர, ஏனைய ஊர்களில் இன்று வலையர் என்ற வகுப்பினர் இல்லை. மாறாக, அகமுடையார் பிரிவைச் சேர்ந்த

சேர்வைக்காரர்கள்தான் அங்கு இருந்து வருகின்றனர். நயினாக் குட்டி சேர்வைக்காரன் தங்கை உடையக்காள் வலைய சாதிப் பிள்ளையானதை யடுத்து அங்குள்ள வலையர்களும் "சேர்வைக் காரர்கள்" ஆகிவிட்டனர் போலும்! அந்த ஊர்களில், நான்கு ஊர் களின் பெயர்களிலும் மாற்றம் காணப்படுகின்றன. குசவன்குளி-குசவன்குடி என்றும், எம்மண்டலங்கொண்டான்–என்மனங் கொண்டான் என்றும், சுந்தரதாசிமடம்-சுந்தரமுடையான் என்றும், காஞ்சான்வீரணி-காஞ்சிரங்குடி என்றும் இப்பொழுது அரசு ஆவணங்களிலும் வழக்கிலும் மாறுதல் பெற்றுள்ளன.

இந்தச் செப்பேடு சொல்லுகின்ற புதுமையான செய்தி ஒன்று உள்ளது. அதாவது வலையரில் பிள்ளை இல்லாமல் போனாலும், தாயாதி பங்காளிகள் இல்லாமற் போனாலும் உரிமைக்காரர் ஒருவருமில்லாதவர்கள் மரணமானாலும் சாதிப்பிள்ளை முன்கை சிரைத்து கருமம் பண்ணுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தகைய வைதீகக் கருமங்களைச் செய்வது இப்பொழுதுகூட ஆண்களது நியதியாக இருந்து வருகிறது. மேலும் இந்த 'பலிசாதனப் பட்டயம்' தமிழ்ச் செப்பேடுகளில், ஒரு புதிய வகையைக் குறிப்ப துடன் சிறுபான்மையினரான வலையர், தங்கள் சமூகத்தில் பெண்ணுக்கு எத்தகைய சிறப்பான சமூக நிலையை அளித்து இருந்தனர் என்ற உண்மையையும் உணர்த்துவதாக இருக்கிறது. இப்பொழுது அந்தப் பட்டயத்தைப் படித்துப் பாருங்கள்.

இராமஜெயம்

1 சுபஸ்ரீ ஸ்ரீமது மகாமண்டலேசுபரன் அரியாயிர தள விபாடன் பாசை

2 க்கு தப்புவராத கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடா

3 தான், பாண்டி மண்டலப் பிரதாபாசாரியான் சோள மண்டலப் பிறதி

4 ஷ்ட்டாச்சாரியான் தொண்ட மண்டலப் பிறசண்டன் ஈளமுங் கொ

5 ங்கும் யாள்ப்பாணமும் அளித்து கெசவேட்டை கொண்டருளி

6 ய ராசாதிராசன் ராசபரமேசுரன் ராசமார்த்தாண்டன் ′ ராச கெம்பீ

7 ரன் இளசிங்கம் தளசிங்கம் தொட்டியர் மோகந் தவிள்த்தான் துலு

8 க்கர் மோகந்தவிள்த்தான் எட்டன் தலையில் கட்டும் விருதைக் கா

9 விலே கட்டுங் கலங்காத கண்டன் தாலிக்கு வேலி சத்திராதிகள் மு

10 ண்டன் சொரிமுத்து வன்னியன் சேதுகாவலவன் அடைக் கலங்

11 காத்தான் சேதுமூல துரந்தரன் இராமநாதசுவாமி கூாரிய தரந்தர

12 ன் சிவபூசா துரந்தரன் இரணிய கெற்ப ரவிகுல திலகன் சாமித்துரோ

13 தர் வெண்டயம் விளங்கும் யிருதாளினான் அனுமக் கொடி கெரு

14 ட கொடி சேவல்க்கொடி உடையான் தொண்டியன் துறை கா

15 வலன் செம்பிவளநாடாதிபன் பூலோக தெய்வேந்திரன் வில்லு

16 க்கு விசையன் சொல்லுக்கு அரிச்சந்திரன் குடைக்கு கர்ணன் பஞ்

17 ச பாணா வுதரரன், வீரலெட்சுமி, விசைய லட்சுமி, ராசலட்சுமி சா

18 ம்பிருட் செயலட்சுமி அஷ்ட்டலட்சுமி வாசன் பஞ்ச வர்ணப் பாவாடை

19 விருதினான் செங்காவிக்கொடி உடையோன் மலைகலங்கினும்

20 மனங் கலங்காத கண்டன் சிவசமய பரிபாலநன் அசுபதி கசபதி நரபதி

21 தேவை நகராதிபதியான ரகுநாத சேதுபதி ராச்சி பரிபாலன

22 ம் பண்ணியருளா நின்ற கலியுகம் - 4762 சாலிய வாக

23 ன சகாப்தம், ஷூ 1613 மேல் செல்லா நின்ற பிரசோற்பதி

24 ஷூ வைகாசி மீ 17 தி[உ] இளமநேறியிலிருக்கு நயினுகுட்டி சேருவைகார

25 னுக்கு வலையரில் ராதான் கிளை பூச்சிக் கிளை பட்டங்கட்டி கிளை வீரப்பிள்ளை கிளை படை

26 யன்கிளை அய்வன்கிளை கோணாண்டி கிளை வதிபிடிங்கிகிளை இந்த எட்டு

27 க்கிளையிலுஞ் சேர்ந்தி மூப்பமார் வேளாந்தரவை பெரிய வீரமூப்பன் சி

28 ன்னு மூப்பன் குசவன்குளி அரங்கக் கிளவன், மடத்துடையான் மூப்பன் நெ

29 டு உடையான் மூப்பன் சக்கரைக் கோட்டை வீராண்டி மூப்பன் கருப்ப

30 ட்டிக் கிளவன் காஞ்சானூரணி காஞ்சான் மருங்கன் பெருவயல் பிச்

31 சமூப்பன் சிட்டாரு கோட்டை வீரமூப்பன் அத்தியூத்து பெரிய குப்பன்

32 மூப்பன் சின்னக்குப்பா மூப்பன் ஆண்டிக் கறுப்ப மூப்பன் அளகாங்

33 குளம் நொண்டி முட்டக் கிளவன் ராமமூப்பன் மெய்யமூப்பன் ஆத்தங்கரை

34 ச் சின்னச் சருக்கான் பெரிய சருக்கான் கறுத்தப்பயல் மாகாளி எண்மண்ட

35 லங்கொண்டான் தில்லாமூப்பன் கோடிக்காக் கிளவன் கறுப்ப மூப்பன்

36 தாமரைக்குளம் நம்பியாமூப்பன் கறிதின்னி குப்பா மூப்பன் இருட்டூரணி

37 ஒச்சிமூப்பன் ஒய்யாமூப்பன் பட்டாணி மூப்பன் பிலிச்சான் மூப்

38 பன் வெள்ளையமூப்பன் நாகாச்சிக் கறுப்பமூப்பன் கோனு டையா மூப்ப

39 ன் வேதாளை தூங்கமூப்பன் சுந்தரதாசி மடம் சடையமூப்பன் ராமீசுரம்

40 மாகாளி மூப்பன் ராமுமூப்பன் தினைக்குளம் ராக்க மூப்பன் மோருக்குள

41 ம் வலைக் காவல்க்கார மூப்பன் ஏறுபடி அனகமூப்பன் மடத் துடையாமூப்ப

42 ன் வேம்பாறு மாரிமூப்பன் திருப்பாலைக்குடி கூத்த மூப்பன் வனாதி கறுப்பமூ

43 ப்பன் மங்கலக்குடி சின்ன மெய்ய மூப்பன் சுந்தர பாண்டியன் பட்டண

44 ம் துள்ளுக்குட்டி மூப்பன் நாங்களனைவோருந் தங்களுக்கு பளிக் காணி

45 க்கு எழுதிக் குடுத்தப்பட்டைய சாதனமாவது வேளாந்தரவை வீரமூ

46 ப்பன் மகன் பிள்ளை வீராயி தங்கள் வளவில் சிறுபிள்ளை யில் விந்து

47 சேந்திருந்ததி அந்த பெண்ம் பிள்ளை பெரிய பிள்ளையாய் ருதுவ

48 ாகி சாதியில் கட்டிக் குடாமலிருக்கையில் வயத்தில் கெற்பமாய்

49 ருந்தது அதுகாரியம் தாய் தகப்பன் அண்ணன் தம்பி சாதியார்

50 அரிந்து அந்தப் பெண்ம் பிள்ளை கண்டிச்சு கேள்க்கு மிட

51 த்தில் அந்த பெண்ம் பிள்ளை சாதியாரிடத்தில் சொன்னது நயினு க் குட்டி

52 சேருவைக் கார னூடனே கூடி வயத்திலே கெற்பம் வந்த தென்று ருசுவுட

53 னே சொன்னாள் அவளைச் சாதியார் தெண்டினை பண்ணி உடனே உயிர்வ

54 தைப் பண்ணிப் போட்டு நயினுக்குட்டி சேருவைக்காரனை பளிக்குப் பளி குடு

55 வென்று துரையவர்கள், சமுகத்தில் கொண்டு போய்விட்டு துரையவர்

56 களும் ஞாயத்தை விளங்கி நயினுக்குட்டி சேருவைக் காரனை பளிக்கு பளி குடுக்கச்

57 சொல்லி உத்தரவாகி அந்தப்படிக்கு மரணமான வலைப்பிள்ளை ஒரு கட்

58 டையிலும் நயினுகுட்டி, சேருவைக்காரன் தங்கச்சி உடையக் காளை ஒ

59 ரு கட்டையிலும் வைத்து தீய் வைத்தார்கள் கட்டையும் மெரி தீயும் வய்த்தடே

60 பாதே எங்களுக்கு பளிக்குப்பளி வந்ததென்று உடையக்காளைக் கட்டையை

61 விட்டுக் கீளே இரக்கிவிட்டு நம்மட பிள்ளைக்குப் பிள்ளை வந்ததென்று மூ

62 ப்பமார் ஒப்புக்கொண்டு வலையர் எட்டுக் கிளைக்கு சாதிப் பிள்ளை யென்று

63 பேருங் கொடுத்து எட்டுக்கிளை மூப்பமாருங்கூடி சாதிப் பிள்ளையாகிய உடை

64 டயக்காளுக்கு பளிக்கு எழுதிக் கொடுத்த சாதனப்பட்டைய மாவது யெ

65 ங்கள் சாதியில் கலியாணத்துக்கு ஏழு பணமு அன்பது பாக்கு குறுணி

66 அரிசியும் ஒரு கிடாய் குரங்கு கட்டு தாலிக்கு அஞ்சு பணமு முப்பது பாக்கு மூணு

67 படியரிசியு ஒரு கிடாய் குரங்கும் சடங்குக்கு மூணு பணமும் பதினஞ்சு பாக்கு

68 ம் மூணு படி அரிசியும் ஒரு கோளியும் குடுக்கிறது அதுவும் வலையர்குடி ஓண்

69 ணுக்கு வருஷ கட்டளை ரெண்டு பணமு மூணு படி தவசமு கைம் பெண் குடி ஓண்

70 ணுக்கு ஒரு பணமு ஒருபடிதவசமு யிந்தப்படி குடுக்கிறது எங்கள் சாதியி

71 ல் விவகாரம் வியாக்கியங்கள் வந்தா சாதிப்பிள்ளையை வைத்து கொ

72 ண்டு மூப்பமாரு கூடயிருந்துவிபகாரங் கேட்டு குத்தஞ் சுமத்தி யானயிடத்தில் அ

73 பராதம் வாங்கிற பணம் சாதிப்பிள்ளையைச் சாருகிறது புருஷன் பெண்சாதி சே

74 ராச்சேர்கையாயிருந்து தீந்து போடுகிறதா யிருந்தால் தீருவை 60,

75 ரண்டாம் தீருவை முப்பது பணமும் தீருவை சார்ந்த பேருக்கு குடுத்து விடுகிறது.

76 அபராதப்பணம் சாதிப்பி(ள்)ளையைச் சாருகிறது வலையரில் பி(ள்)ளையில்

77 லாமல் போனாலும் தாயாதி பங்காளிக ளில்லாமற் போனாலும் உரு

78 மைக் காரர் ஒருவருமில்லாதவர்கள் மரணமானால் சாதிப் பிள்ளை முன்

79 கை சிரைத்துக் கருமம் பண்ணுகிறது, அவனுடைய ஆஷ்தி சாதிப்பிள்ளையைச்

80 சாருகிறது யிந்தப்படிக்கு நாங்கள் எட்டுக் கிளை வங்கிஷ மூப்பமாருங்கூடிச் சா

81 திப்பி(ள்)ளைக்கு பளிச்சாதனப்பட்டைய மெழுதிக் கொடுத்த படியினாலே பட்

82 டையத்தி லெழுதியிருக்கிற பிரகார மாதித்த சந்திர பிரபை யுள்ளவரைக்கு

83 ஆண்டனுபவித்துக் கொள்வாராகவும் இதற்கு யாதா மொருவர் தடங்கல்

84 பண்ணினார்களேயானால் அவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசு

85 வைக் கொன்ற தோஷத்திலும் தனுக்கோடிக் கரையிலே பிராமணவதை

86 பண்ணின தோஷத்திலும் மாதா பிதாவைக் கொன்ட தோஷத்திலும் போக

87 க்கடவாராகவும் உ இராமனாத சுவாமி துணை. உ

# பன்னாட்டார் பட்டயம்

நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

அச்சரப்பாக்கத்தைச் சேர்ந்த தமிழாசிரியர் திரு. தாமரைக் கண்ணன் அவர்கள் அண்மையில் ஒரு செப்பேட்டைக் கொண்டுவந்து என்னிடம் காண்பித்து படித்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். அச்செப்புப் பட்டயம் எவ்வாறு கிடைத்தது என்று கேட்ட போது, நெய்வேலியில் வசித்து வரும் திரு. என். எஸ். பெரியசாமி அய்யரிட மிருந்து தாம் பெற்று வந்ததாகவும், அச்செப்புப் பட்டயம் அவ் வய்யரின் குடும்பச் சொத்து என்றும், அதை அவ்வய்யர் நீண்ட காலமாக வைத்துப் பாதுகாத்து வருவதாக அவர் தெரிவித்ததாகவும் ஆசிரியர் கூறினார்.[1]

## செப்பேட்டின் அமைப்பு

நீண்ட சதுரமாகக் காணப்பெறும் ஒரு செப்புத் தகட்டில் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. செப்புத் தகட்டின் மேல் பகுதியில் கைப்பிடிக்காகச் சிறிது நீண்டு செல்கிறது. அதன் நடுவில் சிறு துளை உள்ளது. இத்துளை சிறு வளையத்தில் கோர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கலாம். கைப்பிடிப் பகுதியின் இரு பக்கங்களிலும் கீழ்வருமாறு எழுதப்பட்டு காணப்படுகின்றன.

### கைப்பிடியின் முன் பக்கம்

1. ராசனாறாணய்ய
2. னவர்களுக்கு எழு
3. கரைனாட்டுப் ப
4. ன்னாட்டா ரெழுதி
5. க்குடுத்த சாதனப்ப
6. ட்டையம் உ

### கைப்பிடியின் பின் பக்கம்

1. யிடங்கை வாத்தியம்
2. மேள முதலான தா
3. ரை கொம்பு துடுப்பு
4. தப்பட்டை வாத்தியவுள்
5. பட

1. ச. செல்வராசு, தமிழாசிரியர்கள் கருத்தரங்கு மலரில் இச்செப்பேடு பற்றி அறிமுகக் கட்டுரை எழுதியுள்ளார்.

## கோட்டுருவங்கள்

கைப்பிடியின் கீழ்ப்பகுதியில் சில உருவங்கள் கோட்டினால் வரையப்பட்டுள்ளன. மையப் பகுதியில் சிவபெருமான் உமை யன்னையோடு கைலயங்கிரியில் அமர்ந்திருப்பது போன்று தீட்டப் பட்டுள்ளனர். சிவபெருமான் நாற்கரங்களைக் கொண்டவராக வலது, இடது மேற்கரங்களில் மழு, மான் ஏந்தி, வலக் கீழ்க்கரத்தால் செங்கழுநீர் மாலையை சம்பு மாமுனிவரிடம் வழங்குகிறார். இடது கீழ்க்கரம் வழங்கும் கரமாக உள்ளது.

இடப்பக்கத்தில் அமர்ந்திருக்கும் உமையன்னை வலக்காலைக் குத்திட்டு ஆசனத்தில் வைத்து, இடக்காலை ஆசனத்துக்குக் கீழ் தொங்கவிட்டு வலக்கரத்தில் அல்லி மொட்டு ஏந்தியும், இடக்கரம் வழங்கும் கரமாகவும் கொண்டு அமர்ந்திருக்கிறாள்.

சிவபெருமானின் வலப்பக்கத்தில் சம்பு மாமுனிவர் நின்ற நிலையில் பணிவோடு செங்கழுநீர் மாலையைத் தம் இரு கரங் களாலும் பெற்று, தம்மால் உண்டாக்கப்பட்டுள்ள ஓமத் தீயில் வலக்கரத்தால் அம்மாலையை இடுகிறார்.

சம்பு முனிவருக்கு வலப் பக்கத்தில் ஓமத் தீயிலிருந்து வீர னொருவன் வெளிவருகிறான். இரு கரங்களுடன் வலக் கரத்தில் அம்பும், இடக் கரத்தில் வில்லும் ஏந்தியவனாகக் காட்சி தருகிறான். தலை முடி ஜடாபாரமாக விரிந்து காணப்படுகிறது.

மலைமகளின் இடப்பக்கத்தில் எருமைத் தலை மீது நின்ற கோலத்தில் துர்க்கை காணப்படுகிறாள். வலது, இடது மேற்கரங் களில் ஆழியும், சங்கும் ஏந்தியவளாய், வலக் கீழ்க்கரம் வழங்கும் கரமாகவும் இடக் கீழ்க்கரம் தொடைமீது வைத்தும் காணப் படுகின்றன.

துர்க்கையின் இடப்பக்கத்தில், இப்பட்டயம் யாருக்கு வழங்கப் பட்டதோ அவரது உருவம் வரையப்பட்டுள்ளதாக நான் கருது கிறேன். நாராயணய்யன் அவர்கள் ஆசனத்தில் அமர்ந்த நிலையில் உலகை உய்விக்கும் உலக நாயகர்களான அம்மையும் அப்பனுமாக எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைக் கண்ணுறும் வண்ணம் எதையோ சொல்வது போன்று தீட்டப்பட்டுள்ளார். வலக்கரம்

சற்று மடித்து நீட்டிய நிலையிலும் இடக்கரம் குடையையும் சுவடி யையும் பிடித்திருக்கும் நிலையிலும் காணப்படுகின்றன. தலையில் சிறு குடுமி (உஷ்நீஷம்) இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

**செப்பேட்டின் காலம்**

இப்பட்டயம் 'ஸ்வஸ்திஶ்ரீ மன் மகா விஷ்ணுவானவர்' என்று தொடங்குகிறது. சாலி வாகன ஆண்டு 1555, கலியுக ஆண்டு 4734, இதற்குச் சமமான தமிழ் ஆண்டு ஶ்ரீ முக ஆண்டில், ராச நாராணய்யன் அவர்களுக்கு அனைத்துத் தேசத்தையும் சேர்ந்த பன்னாட்டார் பட்டயம் எழுதித் தந்ததை இது குறிப்பிடுகிறது. தமிழ் மொழியில் தமிழ் எழுத்தில் பெரும்பகுதியும், வடமொழியில் கிரந்த எழுத்தில் சிறு பகுதியும் எழுதப்பட்டிருக்கிறது. இதில் தரப்பட்டுள்ள ஆண்டுகளைக் கணக்கிட்டால் கி.பி. 1633-இல் இச்செப்புப் பட்டயம் எழுதப்பெற்றதாகக் காணப்படுகிறது.

**மூன்று பகுதிகள்**

இச்செப்பேட்டில் கூறப்பெற்றிருக்கும் கருத்தை மூன்று பகுதி களாகப் பிரித்துக் கொள்ளலாம். முதற்பகுதி உருத்திரப் பள்ளி யாரின் மெய்க்கீர்த்தி. பள்ளியாரைப் பற்றிய பல வெற்றிச் சிறப்புக்களும் விருதுகளும் இதில் பேசப்படுகின்றன. உருத்திரப் பள்ளியின் புதல்வர்களாக நீலகங்கன், வச்சிரபாகன், கங்கை பரிபாலன், சம்புகுலவேந்தன், பரசுராமன் ஆகியோர் குறிக்கப்படு கின்றனர். மேலும் இவ்வைவர் மரபிலும் வந்தவர்கள் என்று பார்ப்பள்ளி, துட்டப்பள்ளி, சிட்டப்பள்ளி, வன்னியப்பள்ளி, அரசப்பள்ளி என்றும்; அவர்கள் அனைத்துத் தேசத்திலும் பரவி பன்னாட்டார் என வழங்கி வந்தனர் என்றும் தெரிவிப்பதோடு அவர்களது வெற்றிச் சிறப்புகளையும் விருதுகளையும் கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

**பன்னாட்டார்**

திருமாலினால் அளக்கப்பட்ட பூலோகம் எல்லாவற்றையும் அசையாமல் காத்து, செயத்தம்பம் நாட்டி வைக்கும் மகா மண்டலாதீசுவரன், கண்டரில் கண்டன், மிண்டரில் மிண்டன்; வண்டராவுத்தன், உத்தண்டகோலாகலன், இடங்கைச் சமயகுலதீரன், மணிமகுடமுடி மாலை சூடும் மனோ பயங்கரன், ஈழம் வைய்கையும்

திறை கொண்டருளிய ராசாதி ராச ராசபரமேசுவரன், நவகண்ட சக்கிரவர்த்தி, மலைகலங்கிலும் மனங் கலங்காதவன், ஒரு குடைக் கீழ் உலக முழுதுமாண்ட ராசகோலாகலன், சுவாமி கயிலாசகிரிக்கு பிறதானிகர்,

அக்கினி பாணம் பெற்றவர், சங்க நிதி பத்மநிதிக்குடையவரான குபேரனைப் பொக்கிசமாகப் படைத்தவர், கண்ட நாடு கொண்டு கொண்டநாடு விடாத மகமேரு சமான வம்ச நாராயணன், வம்ச பரிபாலகர், வம்ச சிந்தாமணி, செங்கழுநீர் பூ, வாடாத மாலை, வண்ணத் தரு(டு)க்கு, வலம்புரி சங்கு, பஞ்சவர்ணப் பாவாடையுடனே காமாட்சி அம்மன் கை முத்து மாலிகையும் மோகனப் பதக்கமும் அழிவிலாச் செல்வமும் அதிக வரமும் பெற்றவர், அக்கினியில் பிறந்து அம்பின் உரங் கண்டவர்,

கங்கைகொண்ட சோழன் திருமுடிகாத்தவர், ஈயாநாட்டுக்கிறைவனாகிய யிலவலன் வாதாவியைச் செயித்துக் காகமாமுனி கன்னி அபிமானங் காத்தும், சோழநாடு விளங்கத் துட்ட ராட்சதர்களைக் கொன்றும், அறுபத்து நாலடிக்கம்பத்திலேறி எமனைப் பரிகசித்தவர்,

முன்னூல், பின்குடுமி, புலிக்கொடிபதாகையும், அஞ்சுபஞ்ச விருதும் பெற்ற இடங்கைச் சமையத்துக் கதிபதியானவர், கலகண்டிகைத் தேரும், அக்கினிப்புரவியும், சங்கமும், செகசம்புக் குடையும், பஞ்சமுகத் தீவட்டியும் உடைத்தான், கலை சாம்ராச்சிய இலட்சுமி சீனிவாசன், சிவ சமய, விஷ்ணு சமய, தேவ பிராமண காரிய துரந்தரர், ஆயுள் ஆரோக்கியம், அட்ட ஐசுவரிய வில்வனிசய பராக்கிரமர், எழுகரை நாட்டுக் கதிபதியான சறுவமானிய அபிமானங் காத்தவர், விபூதி ருத்திராட்ச மாலிகாபரணர், அன்னதான வினோதர், சகல திறம் பரிபாலகர், குமாரசுவாமியையும் துர்க்கையையும் படைத்தலைவராகப் பெற்ற பன்னாட்டார் என்று விவரித்துள்ளது.

## வலங்கை இடங்கைப் போரும் நடுவர்கள் தீர்ப்பும்

இரண்டாம் பகுதி இடங்கைச் சமயத்துக் கதிபதியானவர்களான பன்னாட்டாரின் விருதான பஞ்சவர்ணப் பாவாடையை வலக்கையார் பிடுங்கிக் கொண்டபோது, சேலம் சீர்மை எழுபத்தாறு நத்தத்திலுள்ள பன்னாட்டார்களும், வெளியூர் நாடு முப்பத்திரண்டு

கிராமத்திலுள்ள பன்னாட்டார்களும், ஆதி நாடு அறுபத்திநாலு நத்தத்திலுள்ள பன்னாட்டார்களும், தம்மம்பட்டி மங்கலபுரத் திலுள்ளோர்களும், ராசிபுரம் நாடு சேந்தமங்கலம், ஏழூர் நாடு பரமத்தி, பரித்திப்பள்ளி நாடு பவானி, மணலி நாடு, தகடிப்பாடி நாடு, பந்துறை நாடு, பவாணி நாடு, சாம்பள்ளி நாடு, ஓமலூர் அஞ்சுகரை நாட்டிலுள்ளோர்களும், தவம்புச் சீமையிலுள்ள வன்னி யரும், தென்கனிக்கோட்டை முதலாகிய அனைத்துத் தேசத்துப் பன்னாட்டார்களும் இடங்கைக்குள்ளாகிய சர்வ சனங்களும் திக்குகள் தோறும் கூட்டம் கூடி நியாயந் தீராதபடியினாலேயே: சேரமண்டலம் சேல நாட்டில் திருவணிமுத்தா நதி சூழ்ந்த சேல, மாநகரம் கருப்பூரில் இடங்கையார் அனைவரும் வந்திறங்குகையில் வலங்கையார்க்கும் இடங்கையார்க்கும் கைகலப்பு சண்டை ஏற்பட்ட தறிந்து, சேர நாட்டு சேலமாநகரம் கம்பளராசேசுவரன் வெங்கடபதி நாயக்கரும், தளவாய் பெத்தள நாயக்கரும் நடுநிலையாளர்களாக (மத்யஸ்தர்கள்) இருந்து, வலங்கையார் இடங்கையாரை அழைத்து அவர்களது யாகம், புராணம், கதை ஆகியவற்றைக் கூறும்படி கேட்டு இடங்கையாரே பெரியோர் என்று தீர்ப்பு கூறினதாகச் சொல்லிச் செல்கிறது.

### பன்னாட்டார் கொடை

இடங்கையாரே பெரியோர் என்று தீர்ப்பு வழங்குவதற்கு இராசநாராயணய்யர் கூறிய சாட்சியமே காரணமாக அமைந்ததால் இடங்கையார்களாகிய பன்னாட்டார் மிகவும் மகிழ்ச்சியுற்று யஞ்ஞ நாராயண திட்சதராகிய இராசநாராயண அய்யரே தங்கள் குரு என்றும், தங்கள் தகப்பன் என்றும், இரண்டாம் செம்பு மாமுனி என்றும், பன்னாட்டாரின் காணிக்கையாகத் தங்களில் பெரிய குடிக்கு ரெண்டு பணமும், சின்ன குடிக்கு ஒரு பணமும், தாரைவார்த்துத் திருமணம் செய்பவர்கள் நீர் பணமும், கட்டின ஏர் ஒன்றுக்கு நாலு வள்ளம் தானியமும் சந்திர சூரியர் உள்ளவரைக் கொடுத்து வருவோம் என்று பன்னாட்டார் எழுதிக் கொடுத்திருக்கும் பகுதியை மூன்றாம் பகுதியாகக் கொள்ளலாம்.

### பன்னாட்டார் பட்டியல்

அவ்வாறு எழுதிக் கொடுத்த செப்புப் பட்டயத்தில் 62 ஊரைச் சார்ந்தவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்

**பன்னாட்டார் எனும் சொல் எவ்வாறு ஏற்பட்டது**

இச்செப்பேடு தெரிவிக்கும் பல முக்கிய செய்திகளுள் வன்னியர் களுக்குப் பன்னாட்டார் என்ற பட்டம் இருந்ததாகும். பன்னாட்டார் என்ற சொல்லைப் பல்+நாட்டார் என்று பிரிக்கலாம். பள்ளி என்போர் நில உடைமையாளர்களாக மாறி நாட்டார் என்ற நிலையை அடைந்த பிறகு, பல ஊர் நாட்டார்கள் என்பதைப் 'பன்னாட்டார்' என்று அழைத்திருக்கலாம்.

பள்ளிகள் என்று வழங்கி வந்த மலையோர வாசிகள் (குறிஞ்சி நில மக்கள்) நாளடைவில் மருத நிலப்பகுதிக்கு வந்து நில உடைமை யாளராக மாறிய காலகட்டத்தில் 'பள்ளி-நாட்டார்'[2] என்று அழைக்கப்பட்டு வந்திருக்கின்றனர்.

பள்ளிகள் வீரம் மிக்கவர்களாகவும் வில் தொழில் புரிந்தவர் களாகவும் விளங்கியிருக்கின்றனர். பள்ளிகளைப் பற்றிக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டு அவர்கள், வில் ஒன்றுக்கு ஒரு பணம் அளிக்கவேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியதைத் தெரிவிக்கிறது. அதுமட்டு மல்லாமல் அவ்வாறு செலுத்தாது பிழை செய்வார்களெனில் அவர் வீரர் அல்ல என்று கருதப்படுவார் என்றும் கூறுகிறது.[3] 'இப்பள்ளி களைக் கொண்ட படை' 'முடிகொண்ட சோழத் தெரிந்த வில்லிகள்' என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது.[4]

பள்ளிகள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வாக்கில் தென்ஆர்க்காடு மாவட்டப் பகுதியில் பரவலாக இருந்திருக்கிறார்கள் என்பதை சிங்காவரம்[5], மேல்சேவூர்[6], திருவக்கரை[7] ஆகிய ஊர்களின் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

---

2. Dr. Y. Subbarayalu, "Social Change in Tamilnadu in the Twelfth and Thirteenth Centuries A.D." paper presented in South Indian History Congress.
3. ARE 35 of 1913
4. E.I. Vol. VII, No. 19, S.I.I. Vol. XVII, No. 204
5. S.I.I Vol. XVII, No. 200
6. Ibid No. 249
7. Ibid No. 236

**'சிலை எழுபதில்' பன்னாட்டார்**

கம்பர் இயற்றியதாகக் கருதப்படும் சிலை எழுபது என்னும் நூலில் வன்னியர் 'பன்னாட்டார்' என்றும் குறிக்கப்படுகின்றனர். இந்நூலில் அவர்களின் வில்லின் திறம் விதந்து போற்றப்படுகிறது.[8]

**செங்கழுநீர் மாலைக்கும்-செங்கேணிக்கும் தொடர்பு இருக்குமா?**

இச்செப்புப் பட்டயத்தில் பன்னாட்டாரின் விருதுகளில் ஒன்றாக செங்கழுநீர் மாலை குறிக்கப்படுகிறது. சிவபெருமான் செங்கழுநீர் மாலையைச் சம்பு முனிவரிடம் தர, அதைச் சம்பு முனி ஓம குண்டத்தில் இட்டு யாகம் வளர்த்ததில் வீர வன்னியன் தோன்றினான் என்று இராச நாராயண ஐயர் பன்னாட்டாரின் புராணத்தைக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டுகளில் இருந்த சம்புவராயச் சிற்றரசர்கள் தம் பெயருக்கு முன்பாகச் 'செங்கேணி' என்று சேர்த்து 'செங்கேணி அம்மையப்பன் இராஜராஜ சம்புவராயன்'[9] என்றும், 'செங்கேணி அம்மையப்பன் கண்ணுடைப் பெருமாள்'[10] என்றும், 'செங்கேணி வீராகரன் என்னும் இராஜராஜ சம்புவராயன்' என்றும் கூறிக்கொள்கின்றனர். 'செங்கேணி' என்பது ஊரின் பெயராக இருக்குமா என்று சந்தேகம் எழுந்தது. சம்புவராயர்களுக்கும் செங்கேணி என்ற ஊருக்கும் யாதொரு தொடர்பும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆதலால் 'செங்கேணி' என்னும் இம்முன்னொட்டு 'செங்கழுநீர்' என்பதின் மாற்றமாக இருக்கலாம் என்று கருதலாம். சம்புவராயர்கள் சம்பு குலத்தவர்கள் என்பதும் வன்னியர்கள் என்பதும் அறிந்ததே.

**இராசநாராயணய்யர்**

இடங்கையார்க்கும், வலங்கையார்க்கும் கைகலப்பு ஏற்பட்டு போர் மூண்டபோது வெங்கடபதி நாயக்கரும், தளவாய் பெத்தண நாயக்கரும் நடுவர்களாக அமர்ந்து இரு திறத்தாரின் யாகம், புராணம், கதை ஆகியவற்றைக் கூறும்படிக் கேட்டபோது, இடங்

---

8. பாடல் 67, உரை, வித்வான் சி. செகநாதாசாரியர், வெளியீடு 1968.
9. ARE 57 of 1919
10. Ibid 343 of 1912

கையார் தங்களின் பிரதிநிதியாக யஞ்ஞ நாராயண தீட்சதர் குமாரர் இராச நாராயண அய்யரவர்கள் கூறுவார் என்று கூறவே அவர் பன்னாட்டார் புராணத்தைக் கூறியதாக இச்செப்பேடு பகர்கிறது.

இடங்கையிற் பெரியோராகிய பன்னாட்டாருக்கு வெற்றி தேடித் தந்ததற்காக இராசநாராயணய்யரைக் கவுரவித்து அவருக்குக் கொடை அளித்துப் பட்டயம் எழுதித் தருகின்றனர். அந்த இராசநாராயணய்யர் எத்தகைய சிறப்புப் பெற்றவர் என்பது வடமொழியில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

பிரம்ம வம்சத்தைச் சேர்ந்தவர் என்றும், நான்கு வேதங்களையும் பாராயணம் செய்தவர் என்றும், சாத்திரங்களின் தலைவன் என்றும், எல்லாவித ஆகம, புராண, சாத்திர, வயித்திய நூல்களில் தேர்ச்சி பெற்றவர் என்றும், சித்தாந்தங்களை விமர்சிப்பதில் வல்லவர் என்றும், சாவித்திரியைத் தியானிப்பவர் என்றும், வேள்வி வேட்பவர், வேத அத்யயணம் செய்பவர், ஹாரித கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றும், ஆஸ்வலாயந ஸூத்ராதிகாரர், இறவாசநல்லூரர் இராசநாராயணப் பெருமாள் பாதம் மறவாத இராச நாராயணய்யர் என்றும் சிறப்பித்துப் பேசப்படுகிறார்.

இராசநாராயணப் பெருமாள் என்று இங்கு கூறப்படுவது சம்புகுல வேந்தன் இராச நாராயணன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இராசநாராயணப் பெருமாள் என்னும் மாலவனாக இருக்கலாம் என்று கொள்ளலாம்.

## இடங்கை வலங்கையார்

இடங்கையார்க்குரியவர்கள் சிவன் மற்றும் இந்திரன் என்றும், வலங்கையார்க்குரியவர்கள் பிரமனும் பிருங்கிமாமுனி யென்றும் இச்செப்பேடு தெரிவிக்கிறது. மேலும் உடல் அங்கங்களில் இரத்தம், மாமிசம், சருமம், கண், கருவிழி ஆகியவை இடங்கையர்க்குரியவை என்றும், எலும்பு, நரம்பு, மூளை, நிணம் ஆகியவை வலங்கையார்க்குரியவை என்றும் கூறுவதோடு இடங்கைச் சாதியினர் எண்மர் என்றும் வலங்கைச் சாதியினர் பதின்மர் என்றும் பகர்கிறது. இடங்கை வலங்கை பற்றி ஆய்வு செய்ய விரும்புவோருக்கு மேற் கூறப்பெற்றுள்ள செய்திகள் மிகவும் பயனுடையதாக அமையும்.

# செப்புப்பட்டயம்

## முன் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மன் மகா விஷ்ணுவானவர் தம்முட பாதார விந்தத்தினாலே அளக்கப்படானி[ன்ற]

2 பூலோகமெங்கும் அசையாமல் காத்து செயஸ்தம்பம் னாட்டி வைக்கும் வண்ணிய குல மகா மண்ட

3 லாதீஸ்வரன் கண்டரில் கண்டன் மிண்டரில் மிண்டன் வண்டராவுத்தன் உத்தண்ட கோலாகலன் யிடங்

4 கைச் சமய குலதீரன் மதியாத வன்னியப் பெருமாள் மணிமகுட முடி மாலை சூடும் மனோபயங்க

5 ரன் யீழ மிலங்கையுந் திறைகொண்டருளிய ராசாதிராசன் ரா சபரமேஸ்வரன் நவகண்ட சக்கி

6 றவர்த்தி மலை கலங்கிலும் மனங்கலங்காதவன் ஒரு கொடைக் கீழ் உலக முழுவதும் ஆண்(ட) ராசகோலா

7 கலன் சுவாமி கயிலாசகிரிக்கு பிறதானிக்கராகவும் சதகோடிச் சத வருஷமான அக்கினி பாண

8 ம் பெத்தவர் சங்குநிதி பற்பநிதிக்குடையவரான குபேரனைப் பொக்கிஷமாகப் படைத்தவர் கண்ட

9 னாடு கொண்டு கொண்ட னாடு விடாத மகமேரு சமான வங்ஷனாராயணன் வங்கிஷ பரிபாலகர்

10 வங்கிஷ சிந்தாமணிகர் செங்கழுநீர் புஷ்பம் வாடாத மாலை வற்ணத்தடுக்கு(யி) வலம்புரிசங்கும் பஞ்ச

11 வற்ணப்பாவாடை உடனே காமாட்சி அம்மன் கையி முத்து மாலிகையும் மோகனப் பதக்கமும் அழிவி

12 லாச் செல்வமும் அதிகவரம் பெத்தவர் அக்கினியில் பிறந்து அம்பிணுரங் கண்டவர் கெங்கை கொ

13 ண்டான் சோழந் திருமுடி காத்தவர் யியானாட்டுக் கிறவனாகிய யிலவலன் வாதாவியைச் செயித்துக் கா

14 கமாரிஷி கன்னி அபிமானங் காத்தும் சோழனாடு விளங்காத்து[1] துஷ்ட ராட்சதாளைக் கொன்றும் அறுபத்துனா

15 லடிக் கம்பத்திலேறி நமனைப் பசாரித்த வன்னிய குலராசன் முன்னூல் பின் குடிமி[2] புலிக்கொடிப்[3] பதா

16 கையும் அஞ்சபஞ்ச விருத்தும் பெத்த யிடங்கைச் சமைத்துக் கதிபதியானவர் கல கண்டிகைத் தேரு

17 ம் அக்கினிப்புரவியும் சாமித்துரோக வெண்டையந் தவள சங்குமும் செகசம்புக் குடையும் பஞ்சமு

18 கத் தீவட்டியும் முடைத்தான் கலை சாம்மிறாச்சிய[4] லக்ஷுமி னிவாசன் சிவசமைய விஷ்ணு சமைய

19 தேவப் பிறாமண காரிய துரந்தரர் ஆயிள்ரொக்கி அஷ்ட ஐஸ்வரிய வில்விசைய பராக்கிறமர் எழுகை

20 ர நாட்டுக் கதிபதியான சறுவாம்மானி யாபிமானங் காத்தவர் விபூதி ருத்திராக்ஷ மாலிகாபரணர் அன்

21 னதான விநோதர் சகல திறம் பரிபாலகர் குமாரசுவாமியையும் துர்கையும் படைத்தலவராகப் ப

22 டைத்த பண்ணாட்டாரிட கீற்தி வற்கப் பிறப்பு வழி விளங்கு விபரம் தேவி அனுக்கிறகத்தினாலே

23 வேத மோதி விளங்கிய சறுவ சிவ தயாபரனான வில் வீர பராக் கிறமரான ருத்திரப்பள்ளிய

24 னர் குமாரராகிய நீலகங்கன் வச்சிரபாகன் கங்கை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன் யி

25 வர்களாகம் கதை பூறுவம் னாலு வேதத்துக் கஞ்சாம் வேதமென்றும் மகாபாரதம் விளங்கின

---

1. வளங்காத்து என்று படிக்கவும்.
2. பின்குடுமி என்று படிக்கவும்.
3. வரிக்குக் கீழ் எழுதப்பட்டுள்ளது.
4. சாம்ராச்சிய என்று படிக்கவும்.

26 து அந்த சொச்சம் நின்றது வாதாவியைச் செயித்து ருத்திரப் பள்ளியார் ஆண்டது வாதாவி ரத்தி

27 ணாகிரிப்பட்டன மீழ மிலங்கை யிமையோற் பற்வத மெட்டுத் திக்கு மஷ்டதிக்கு பாலகர் கா[வ]

28 லாகிய செம்பூத்தீபம் ஆதிசேஷன் ஸஹஸ்ர பணா பணிய பரிசத்து த்வ தஸபுவன மத்யலோக ஜம்பு

29 ற்திப மகாமேரு தெக்ஷண பார சம்பிரதஹ கண்ட பிறபஞ்சயம் அங்கதேம்[5] முதல் ரெவண தேசபரியந்

30 தம் யிப்படி விள்ங்கா நின்ற அபத்தாறு[6] தேசாதி தேச மீழ மிலங்கையும் திறை கொண்டருளிய ராச

31 ராசேஸ்வரன் நவகண்ட சக்கிறவற்த்தி மலை கலங்கினு மனங் கலங்காத வில்வீர பராக்கிறம ருத்

32 திரப் பள்ளியார் வரத்தில் வந்த நீலகங்கன் கெங்கை பரிபாலன் வச்சிரபாகன் பரசுராமன் சம்புகு

33 ல வேந்தன் யிந்த அயிவர் மரபில் வந்த பார்ப்பள்ளி யென்றும் துட்டப்பள்ளி யென்றும் சிஷ்டப்பள்ளி யெ

34 ன்றும் வன்னியப் பள்ளி யென்றும், அரசப் பள்ளி யென்றும் யிப்படி அஞ்சு சாதிப் பள்ளியும் தேச தேச மெ

35 ல்லாம் பரவி நிற்கும் பண்ணாட்டார் சங்கோகிகையில் விருது பஞ்சவர்ணப் பாவாடையை வலக்கைய்

36 யார் பிடுங்கும்போது சங்கொ(ற்)தி சேலம் அழகாபுரம் பண்ணாட்டாருடன் முறை செய்யும் பொது யிட

37 ங்கைச் சமையம் பண்ணாட்டார் கூட்டம் சேலஞ்சீமை எழுபத்தாறு நத்தத்திலுள்ள பண்ணாட்டார்க

38 ளும் வெளியூர்னாடு முப்பத்திரெண்டு கிறாமத்திலுள்ள பண்ணாட்டார்களும் ஆதினாடு அறுபத்தி னாலு நத்

39 தத்திலுள்ள பண்ணாட்டார்களும் தம்மம்பட்டி மங்கல புரத்திலு ள்ளோர்களும் ராசிபுரனாடு சேந்தமங்கல

5. அங்கதேயம்.

6. அய்ம்பத்தாறு.

40 ம் ஏழூர்னாடு பரமத்தி பரித்திப்பள்ளி னாடு மணலி னாடு
தகடப்பாடி னாடு பூந்துறை னாடு பூவாணி னாடு சா

41 ம்பள்ளி னாடு ஓமலூர் அஞ்சுகரை னாட்டிலுள்ளோர்களும்
தளம்புச்சீமையிலுள்ள வன்னியரும் தென்க

42 ரைக் கோட்டை யிது முதலாகிய தேச தேசத்துப் பண்ணாட்டார்
களும் யிடங்கைக்குள்ளாகிய சற்வ சென

43 ங்களும் திக்குத் திக்குக் கூட்டங் கூடி நியாயந் தீராதபடியினாலே
சேரமண்டலம் சேரனாட்டில் திருவணி

44 முத்தாநதி சூந்த[7] சேலமாநகரம் கருப்பூர் தாபரமாக யிடங்கை
யார் வந்திரங்கும்போது வலங்கை

45 ய்யார்கு மிடங்கைய்யாற்கும் கை கலந்து சண்டையாமெங்குற
தறிந்து சேரமண்டலம் சேலமாந

46 கரம் மூன்றாம் வீட்டிக்கு னாலாம் வீடாய்ச் செங்கோல் செல்
லுத்திய கம்பளராச ராசேசுரன் தினை புவனாதி

47 பன் செவுகுலதீபகன் முல்லையந் தார் மார்பகன் பதினெட்டு
மன்னிய மிண்டன் நரலோகர் கண்டன் வ

48 ங்கிஷ மாற்தாண்டன் சேர சோள பாண்டிய வல்லாளராய
மனோபயங்கரன் மண்டல மதிக்கு ம

49 திமுகவதனன் பனிரெண்டு கட்க மதகெசம் படைத்த பரி(தி)
குலதீரன் சதுர்வேத பார(ா)யண தாதாச

50 ாரிய சிஷ்னாகிய[8] பட்டாபி மேக பரிபூறண தயாபரனாகிய
வெங்கிடபதினாயக்கரும் தளவாய் பெத்த

51 ளனாயக்கரும் மத்திய ஸ்தானத்திலே யிருந்து கொண்டு
வலங்கைச் சமயக் காரியக்காறரை அழை

52 த்து வுங்கள் வலங்கை யாகம் புராண கதையுண்டானத்தை
ஓதச் சொல்லிக் கேட்டதன் பின் யிடங்கைச்

53 சமயத்துக் காரிக்காறரை[9] அழைத்து யிடங்கையாகம் புராணமும்
ஓங்கள் பிறப்பு வளப்பு உண்டான

---

7. சூழ்ந்த

8. சிஷ்யனாகிய

9. காரியக்காரரை

54 புராணங்களை அழைப்பிக்கச் சொல்ல ஆதினாட்டுக் கதிபதி யான னாடு சேவர்க் கவுண்டரும் பாண்டிய

55 ல சிர்மையிலாறுரிலிருக்கும் பிறுஹ்ம வங்கிழத்தில் மனு விக்ஞான சாஸ்த்ர வேதாகம புராணம் யி

56 டங்கை வலங்கைச் [சமயார்த்தம்மும்] யிடங்கைய்யார் பிறப்பு வ(ள)ர்ப்பும் வன்னிய புராணமுமறிந்த யக்ஞ

57 நாராயண தீக்ஷித குமாரன் ராசனாராயண அய்யரவர்களை அழைச்சுவந்து விடக் கம்பளரா

58 யருடன் பிறசங்கம் பண்ணுகுறார் ஸ்வாமி ஆதிகாலத்திலே யிடங்கை வலங்கை யெங்குற பேதமும் ப

59 ரமேஸ்வரன் பாற்வதாதேவி அம்மனைத் தொட்டு வந்தது, அந்த ஆகமமோதிய பின் ரெண்டாவுது சிவ

60 னாரிடத்து பாகம் பிறவேணுமென்று அம்மன் பாதாள கம்பா நதியில் அரிய தபசு பண்ணி பரமேஸ்வ

61 ரருட வாமபாகம் பெத்தது, மூன்றாவது யிந்த யிடங்கைக் குடையவர் வர சிவனும் தெவேந்திரனும

62 ாம்; வலங்கைக்குடையவர் விறும தெவனும் பிறுங்குமகா ரிஷியு மாம்; சரீரக்கூறில் ரெத்தம் மாங்

63 கிஷம் சற்மம் நேத்திரம் கருமுழியு மிடங்கைக் கூறுமாம்; எலும்பு நரம்பு மூளை நிணம் யிது வலங்கை

64 க்கு சேந்தது; வலங்கைச் சாதி பத்து, யிடங்கைச் சாதி எட்டு, ஆக பதிநெட்டுச் சாதிப் பிறப்பு வளப்பு மே

65 ாதியபின் யிடங்கைப் பெரியோனாகிய பண்ணாட்டார் பிறப்பு வளப்பு எப்படி யென்றால் வன்னிய புர

66 ாணம் பூற்வகாலத்தில் பரமேஸ்வரர் துவாரபாலகருக்கு மூன்று பிறப்பு சத்துருவாக வாவென்று சாபங்

67 கொடுக்க அவிதாரத்தில் யிரணிய நிரணியகசிபு வென்றுரு பிறப்பு, ராவண கும்பகற்ண நென்றொ

68 ரு பிறப்பு, சிசுபாலன் தென்றவக்கிற நென்(ெ)றாரு பிறப்பு யிப்படி மூன்று பிறப்பு மித்துரு சத்துருவாக

69 வந்தனாள் சொச்சம் நின்றது வில்வலன் வாதாவி யென்றும் ராக்ஷதனாகப் பிறந்து சொற்க மத்திய ப
70 ாதாள லொகம் மூன்றுங் கொள்ளையிடும்போது சகலமான தேவரிஷி கெணங்களெல்லாரும்
71 கைலாசகிரியில் பரமெஸ்வரருடன் முறையிடும்பொது சுவாமியா ரந்த க்ஷணம் செம்பு மாமு
72 னீஸ்வரனை வரவழைத்து உம்முட வரப்பிறகாத அக்கினி குமார வன்னியனை அழைப்பிக்க வே
73 ணுமென்ன அப்போ விஸ்வகர்மன் யாகசாலை யுண்டுபண்ணப் பாற்வதா தேவியம்மனிடத்து

## பின் பக்கம்

1 வுள்ளங்கை ஓம குண்டமாக பரமசிவன் நெத்திக் கண்ணக்கி நியாகச் சிவன்(ந்) திருமார்பிலணிந்த செங்க
2 ழனீர் மாலையைச் செம்பு மாமுனிவர் வாங்கி பிறம்மா வேதமோத செம்பு மாமுனிவர் ஆகருஷ்ண மந்
3 திரத் தியானம் பண்ணி திருப்பாற்கடலில் அமுற்தத்தி லுதையஞ் செய்த நாராயண மூற்தியே நீர் வ
4 ன்னிய குமாரனாய் யிடங்கைக் காத்தனாய்த் தேவ தேவாதிகள் சிறை மீள்க வரவேணுமென்று ஓமாக்
5 கினியிற் போடக் கறுகறுத்த மேனியும் கறுப்புச் சடையுங் கட்டிய கச்சையுங் கைவில்லும் முதுகில
6 ம்புறாத் தோணியுந் தோளில் முன்னூலும் மார்பிலணிந்த பஞ்சவர்ணத் தார் வட முத்து மாலிகை வண்ணத்த
7 டுக்குஞ் செங்கழுநீர் வாடாத மாலையும் பூசிய சந்தனமு மரையில் வீரகிங்கிணி வீரிட்டலறக் கை
8 யில் வீர வாளும் பஞ்சவற்ணப் பாவாடை வீசப் புலிக்கொடிமேல் நோக்கி வரச் செக சம்புக் குடை நிழற்
9 அகோர கோபத்துடன் வில் வீரன் பிறந்து நிற்கச் சிவன் மந்திர உபதேசம் பண்ண மகாயரம்[10] பெத்து வாதாவிய்

10. மகாவரம்

10 யைச் செயித்து வன்னிய குமாரவாகிய ருத்திரப்பள்ளியார் பிறப்பு வளப்பு ஆகையினாலே பஞ்சவன்னப் பா

11 வாடையு மறுகால் புணரிகாசனமுஞ் செக சம்புக் குடையும் பஞ்சமுகத் தீவட்டியும் படைத்த யிடங்கைப் பெ

12 பரியோனாகிய பண்ணாட்டாரென்று கம்பளராசனுடன் ராச னாரண அய்யன் சொல்ல வலங்கையார் வி

13 யாக்கிறம் போலெ சீறியெழுந்து வித்துவான் கட்டின கட்டு யெங்களுக்குச் சம்மதியோ காஞ்சிபுரத்திலெ

14 பிறமாணத்திலே ஒப்பிக்கச் சொல்லு மென்று கம்பளராயனைக் கேட்க கமளராயனு மவர்கள் சொன்ன

15 பிறகாரம் ஒப்பிய்யு மென்ன ராசனாறண அய்யனும் சம்மதித்து யிந்த ஸ்தலமே காஞ்சிபுரமென்று பொ

16 ன்னம்மன் சன்னதியில் யிடங்கை வலங்கை திருவெழுத்து ரெண்டு மெழுதி அக்கினி பிறவேசம் பண்ண வல

17 ங்கைத் திருவெழுத்து வெந்து போச்சு யிடங்கை திருவெழுத்து வேகாதபடியினாலே கம்பளராயனு மதி

18 க சந்தோஷமாகி ராசனாறணய்யனுக்கும் பண்ணாட்டாருக்கும் வெகுமானமுதவி எடங்கைப் பெரியோ

19 நென்றும் விருதுடைய பண்ணாட்டாரைப் பட்டணப் பிறவேசம் பண்ணி வச்சு அனுப்பி விட்டார் வெகு சந்

20 தோஷத்துடன் தேசதேசத்துப் பண்ணாட்டாரெல்லோரும் ஏகஸ்தராய் நம்முட தகப்பன் செம்புமா முனிவரா

21 மே செம்பு மாமுனிவர் ஓமாக்கினியிதிற் பண்ணாட்டாரை வங்கிஷோத்தாரணம் பண்ணப்பட்ட செம்பு

22 மாமுனிவராம் ப்ரம்ம வங்கிஷ சதுற்வேத பாரயண தர்ம சாஸ்த்ர நிருக்த சகலாகம புராண சாஸ்த்ர வயித்திய

23 சாஸ்த்ர *(ரி)* வாக்ய சித்தாந்த கணிதஹ ப்ரவீணரான [அநேத் வச] அன்ன வ(ர)ஹ்ந யக்ஞோபவீதாலங்கிருத

24 காயத்ரி கவச சாவித்திரி த்யான சரஸ்வதி வாத்யாதிகாரரான பூர்வ சிகாப்பிராமண ஹோமகுண்ட ஸ்தா

25 பநாச்சார்ய ப்ரதிக்ஞாகுண ருக்வேதா[சார்]யான ஹரித கோத்ர ஆஸ்வலாயன சூத்ராதிகாரரான யிறவா

26 ச நல்லூராதிபன் க்ராமாத்பநாதர் ராசநாராயணப் பெருமாள் பாத மறவாத ராசனாறணைய்யரவர்கள்

27 செம்புமா முனிவரே யிவராகியும் நம்முட பண்ணாட்டார் குல குருவாகியும் நம்முட வன்னிய புரொகிதராகி

28 யும் நம்முட பண்ணாட்டார் குலவங்கிசாபிவிற்தி பண்ணின தகப்பனாகிய ராசனாறணைய்யநவர்க

29 ளுக்கு தேச தேசத்துப் பண்ணாட்டார் ரெல்லோருங்கூடி ஏகஸ் தராய் நிசவற்தனை எழுதிக்குடுத்த னாள்

30 ஸ்ரீமன் ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹன கசாப்தம் ௲௫௱௫௰௫[11] சுகேத கலியுகமானது ௪௲௭௱௩௰௪[12] இதி

31 ன் மேல் செல்லாய் நின்ற ஸ்ரீமுக னாம சம்வச்சரம் தெக்ஷணா யனம் காற்திகை மாசம் சாரிது கிஷ்ண பக்ஷ

32 ம் புதவாரம் பஞ்சமியும் பூச நக்ஷத்ரம் சுப்பிறனாமயோகம் தை துலவாகரணம் யின்னாள் யிருபத

33 ரை னாழிகைக்கு மேல் சுபக்கிறகங்கள் நோக்குண்டான மீன லக்கினத்தில் சந்திர ஓரையில் ராசசபே

34 வளையிலு நிசவற்தனை சாசனப் பட்டயம் எழுதின தாவரம் சேரமாமலை சேரனாட்டில் திருவணி மு

35 த்தா நதி சூழ்ந்த சேலமாநகரில் கிளிவன்னனாதர்[13] சன்னதியில் அழகிய பொன்னம்மன் சாட்சியாய்

36 வருஷம் பிறுதியும் குருகாணிக்கை பெரிய குடிக்கு ரெண்டு பணமும் சின்ன குடிக்கு ஒரு பணமும்

37 கலியாணத்தில் தாரை வாற்குற யிட்ட னீர் பணமும் கட்டின பேரொன்னுக்கு நாலு வள்ளந் தா

11. 1555

12. 4734

13. கிளிவண்ணநாதர்

38 னியமும் ஆசந்தாற்கமாகக் குடுத்து வருகுறோமென்று எழுதிக் குடுத்த ஸாஸநப் பட்டையம் நீல

39 கங்கன் வச்சிர பாகன் கங்கை பரிபாலன் சம்புகுல வேந்தன் பரசுராமன் இவர்கள் சந்ததி

40 யாகிய அழகாபுரம் மெய் பொகரராயக்கவுண்டர், குமாரசுவாமிக் கவுண்டர், எறபகவுண்டர்,

41 சேலம் முதலிக் கவுண்டர், பிரமிச்சி கவுண்டர், செவி கவுண்டர், அனதாரிபட்டி அனதாரி கவுண்ட

42 ர், பருவத கவுண்டர், அய்யம் பெருமாக் கவுண்டர், அயோத்தியா பட்டணம் தெய்வராயக் கவுண்ட

43 ர், செல்லப்ப கவுண்டர், னாழிக்கலமங்காக் கவுண்டர், ஓலைப் புடையார் காங்கய குருக்கவுண்டர், கந்த

44 ப்பம் பட்டி கந்தப்ப கவுண்டர், கடத்தூர் வாத்தியாக் கவுண்டர், சின்னாக்கவுண்டர், சீரகப்பாடி நல்லிரிசாக் கவுண்டர்,

45 புத்திரி கவுண்டர், சென்னகிரி ஒட்டைனாழி யிரிசாக்கவுண்டர், வெள்ளைய கவுண்டர், வீரபாண்டி மந்திச் சின்னா

46 க் கவுண்டர், பாலம்பட்டி வடமலை கவுண்டர், கோட்டைக் கவுண்டர் வயிருசி வெத்திலைப் பிரமிச்சி கவுண்டர் தேவ

47 த்தாக் கவுண்டர், பிச்சபிள்ளை பிச்ச கவுண்டர், மல்லூர் மாணிக்க கவுண்டர், கூத்த கவுண்டர், அண்ணாமலை பட்

48 டி சேர்வை முத்தாக் கவுண்டர், பொன்பரப்பி பெரிய குப்ப கவுண்டர், ஆண்டி கவுண்டர், அம்மாபாளையம்

49 ஆட்டையாம்பட்டி ராய கவுண்டர், பிச்ச கவுண்டர், வெங்காப் பட்டி குழந்தைக் கவுண்டர் செந்தலைக் கவுண்டர்

50 மூக்குத்திதாசன், வாழைக் குட்டைப் பட்டிப் புத்திரி கவுண்டர், சின்னாக் கவுண்டர், அம்பு கட்டி பாளையம் குட்

51 டையாக் கவுண்டர், பெத்தாக் கவுண்டர், மின்னக்கால் கோரை யிரிசாக்கவுண்டர், சின்னாக் கவுண்டர், வெம்படித

52 ளம் ஆணைக்குட்டி கவுண்டர், கல்பறை சின்னப்பாலிக் கவுண்டர், சேவாக் கவுண்டர் யிளம்பிள்ளை யிளமைக

53 வுண்டர், மொந்தைக் குட்டி கவுண்டர், நயினாம்பட்டிச் சேர்வை நயினாக்கவுண்டர், தொக்காதுக் கவுண்டர், வெ

54 ள்ளையாக் கவுண்டர், அய்யம் பெருமாக் கவுண்டர், வட்டமலைக் கவுண்டர், நயினாக் கவுண்டர், செவாக் கவுண்ட

55 ர், நல்லரையன் பட்டி பூவாக் கவுண்டர், குப்ப கவுண்டர், வடக்கு முகம் பிரமிச்சி கவுண்டர் கரியபெருமாள் க(ப)

56 ம்பை கவுண்டர் அரியாகவுண்டர் நயினாக் கவுண்டர், வெள்ளைய கவுண்டர், வெடிச்சி கவுண்டர், மொண்ணைய கவு

57 ண்டர், நல்லாக் கவுண்டர், வடமலை கவுண்டர் மற்று முண்டாந உறவின் முறையாரும், வெளியூர் னாடு பச்சையாக்

58 கவுண்டர், புளி வாண்டை யிரிசாக் கவுண்டர், நயினாக் கவுண்டர் சின்னாக் கவுண்டர், மூற்தி கவுண்டர், மன்னாக் கவுண்ட

59 ர். தேவராடிக் கவுண்டர், மத்துமுண்டாந உறவின் முறையாரும்; ஆத்தினாடு சேவாக் கவுண்டர், அம்பாயிரக் கவுண்ட

60 ர், வரதன் கவுண்டர், கறுப்புடையார் கூத்த மூப்பன், மத்து முண்டாந உறவின் முறையாரும், ராயப்பநல்லூர் காங்க

61 ய வுடையார், வெங்கிடாத்திரி உடையார், மத்தும் பனிரெண்டு பத்திலுள்ள உறவின் முறையாரும்; மங்கலபுரம் குரு

62 னாதபிள்ளை, மத்து முண்டான உறவின் முறையாறும்; ராசிபுரம் பிரமிச்சி கவுண்டர், உடையாக் கவுண்டர், மத்துமுண்

63 டான உறவின் முறையாரும்; சேந்தமங்கலம் குள்ளச்சேருவை காறன் குள்ளத் தாண்டவ கவுண்டர், ஏழூர் மாணி

64 க்கவுண்டர், பரமத்திச் சீமை வேலாயுதம் பாளையம் அனந்த கவுண்டர், மத்து முட்தனாடு, பாண்டிய தேசத்திலுண்

65 டான உறவின் முறையாரும்; துறகம் வெங்கிடாத்திரி கவுண்டர்' பரித்திபள்ளிப் பாலாண்டிடைக்கவுண்டர்,

66 தாழையூர் நொறுக் கிரிசாக் கவுண்டர், வைகுந்தம் அய்யம் பெருமாக் கவுண்டர், வேல்நத்தம் வடமலை கவுண்டர், ஆட்டை

67 யாம்பட்டி செங்கோட கவுண்டர், திருமலை கவுண்டர், கண்டக மாணிக்கம் செவிகவுண்டர், தாண்டி கவுண்டர், மிமாப்பட்

68 டி வெங்காக் கவுண்டர், வேலப்ப கோவில் பரித்திப் பள்ளினாடு முப்பத்திரெண்டு கிறாமத்திலுள்ள உறவின் முறையாரும்;

69 யிரனாபுரம் பூவணினாடு அரசிராமணி ஆனைக் கவுண்டர், கன்னியாக் கவுண்டர் ராம கவுண்டர், கள்ள குளம் வாத்தியாக் க

70 வுண்டர், யிடப்பாடி பிச்சி கவுண்டர், ஆடையூர் நயினாக் கவுண்டர், பூவாணினாட்டு அரியாக் கொத்தன் சிவந்தாக்க

71 வுண்டர், சித்தார் ஆவணி வேலுயிருப்பளி சமுத்திரம் கச்சுவளி யிளம் கவுண்டர் முன்னுள்ள உறவின் முறையாரு

72 ம்; ஓமலூர் அமரகுன்றி தாண்டவராய கவுண்டர், அத்திக் குட்டை பிரம கவுண்டர், அழகப்ப கவுண்டர், மேச்சேரி கு

73 ட்டையாக் கவுண்டர், தலைக்காவல் யிரிசாக் கவுண்டர். திவட்டி கவுண்டர், யின்னம் ஓமலூர் சிமையிலுள்ள

74 உறவின் முறையாரும்; சாம்பளி உத்தண்டிச் சேருவை காறன்; புத்திரிச் சேருவை காறன் குளத்தூர்

75 நல்லா கவுண்டர், மத்து சாம்பள்ளி னாட்டிலுள்ள உறவின் முறையாரும்; அந்தியூர் மந்திக் கவுண்டர், யிரச

76 ாக் கவுண்டர், அரிச்சிக் கவுண்டர், அங்கிலுள்ள உறவின் முறையாரும் தெங்கரைக் கோட்டை வடமலைக்க

77 வுண்டர், கோணப்ப கவுண்டர், அந்தச் சிமையிலுள்ள உறவின் முறையாரும்; தர்மபுரிக் கோநேரிக் கவுண்டர், க

78 டகத்தூர் பச்சையா கவுண்டர், மத்துமந்தச் சிமையிலுள்ள உறவின்முறையாரும்; காவேரிப்பட்டணம்

79 அணிச்சியாக் கவுண்டர், தட்டைக்கல் கோனேரி கவுண்டர். நெடுங்கல் குப்பக் கவுண்டர், திருப்பத்தூர் மாணிக்க

80 கவுண்டர், அணிச்சி கவுண்டர். பின்னும் உத்தர தேசத்திலுண்
டான உறவின் முறையாரும்; கீழ் தேசத்துறவி

81 ன் முறையாரும்; தெற்கு மேற்கு தேசம் யிதுனாங் கெல்லைக்
குள்ளாமயிம்[14] சேது முதலான பஞ்சாஷ்ட

82 கோடிவிஸ்திற பூமண்டலத்தில் உண்டான உறவின் முறையா
ரெல்லோற்கும் செம்பு மா முனிவ

83 ரல்லோர் தகப்பன் யிந்த யுகத்தில் நம்முட பண்ணாட்டார்
வங்கிஷம் அபிவிற்தியாக்கிவிக்கும் ரெண்டா

84 ந் செம்பு மாமுனிவர்ராகிய யெக்ஞ, நாராயணதீக்ஷதர் ராச
னாராயண அய்யநவாளுக்கு நிசவற்தனைச் சாச

85 னப்பட்டையம் யெழுதிகுடுத்து வருஷம் பிறிதியும் பெரியகுடிக்கு
ரெண்டு பணமும் சின்னகுடிக்கு ஒ

86 ரு பணமுங் கலியாணத்தில் தாரைவாக்குற யிட்டு நீர்பணமுங்
கட்டின யேரொண்ணுக்கு னாலுவள்ள

87 தானியமும் ஆசந்திராற்கமாக புத்திர பவுத்திர பாரம்பரிய
மாய்க் குடுத்து வருகுறோம் யிதில் தமுக்கமானா

88 ம் அந்தந்தவூர்க் கவுண்டன் வாங்கிக் குடுக்கத்தக்கவன் கல்லும்
முள்ளும் பத்தரத்தாலுமப்பள்ளி புத்தறாதவன் ஆகை

89 யினாலெ கல்லுங் காவேரியுள்ளளவும் ஆசந்திராற்கமாக
புத்திர பவுத்திர பரம்பரியமாய் குடுத்து வருகுறோ

90 மென்று நிசவற்தனை எழுதிகுடுத்தோம் தாநாயவிநிவிக்கிற
யோக்கியமாக ஆசந்திராற்கம் புத்திர பவுத்தி

91 ர பாரம்பரியமாய நீங்கள் அனுபவிக் கக்கடவராகவும் யிந்த
கீற்தி பிறதிஷ்டை பண்ணாட்டார் சகலம

92 ான பேருக்குமுண்டு யிந்த தற்மபரிபாலனம் பண்ணிநபேருக்
காசி ராமேசுரத்திலே கோடி சிவலிங்க பிற

---

14. குள்ளாமும் என்று படிக்கவும்

93 திட்டையும் பிறதிட்டைப் பண்ணிந பலனை யடைவார்கள் யிந்த தர்மத்தை யாதாமொருவன் விகாதம் பண்ணுகு

94 ற நினைகுற சொல்லுகுற யிந்த முணுபேருக்கும் தோஷமென்னா வின்றால் கெங்கை கரையில் ஏழு காராம்ப

95 .சுவைக் கொன்ற தோழமும் அஸ்வஹத்தி பிறமஹத்தி ஸ்ரீஹத்தி சிசு ஹத்தி அஞ்சுமகா பாதகங்கள் பண்ணி

96 னன் தோழத்தை அனுபவிக்க கடவர் யின்னம் ஏழா நரகத்தில் கிழா நரகத்திலே போகக் கடவராகவும்

97 காமாட்சி யம்மன் துணை

சுபமஸ்து

கைப்பிடியில் எழுதப்பட்டுள்ளது. வளையத்திலோ அல்லது கயிற்றிலோ கோர்த்துக் கட்டுவதற்குத் துவாரம் உள்ளது.

பிடியின் முன்பக்கத்தில்

ராசணாறாயணய்ய
னவர்களுக்கு எழு
கரைணாட்டுப் ப
ண்ணாட்டா ரெழுதி
க்குடுத்த சாதனப்ப
ட்டையம் வ சுபம
ஸ்து

பிடியின் பின்பக்கத்தில்

1) யிடங்கை வாத்தியம்
2) மேள முதலான தா
3) ரை கொம்பு துடுப்பு
4) தப்பட்டை வாத்திய வுள்
5) பட

## செப்புப் பட்டயத்தின் தலைப்புப் பகுதியில்

பரமசிவனும் பார்வதியும் கைலயங்கிரியில் அமர்ந்திருக்கும் நிலையிலும், சிவபெருமான் **சம்பு** மகரிஷியின் கையில் செங்கழுநீர் மாலையைக் கொடுப்பது போன்றும், **சம்பு** மகரிஷி நின்ற நிலையில் இடக்கரத்தால் அதைப் பெறுவது போன்றும், வலக்கரத்தால் அம்மாலையை வேள்வித் தீயில் இடுவது போன்றும், அதனருகில் வேள்வித் தீயிலிருந்து வீர வன்னியன் கைகளில் வில் அம்பு ஏந்தி வெளிப்படுவது போன்றும், பார்வதிக்கு அருகில் எருமைத் தலைமீது **துர்க்கை** நின்ற நிலையிலும் அவரது அருகில் ஒரு பிராமணர் பீடத்தின் மீது அமர்ந்து பரமசிவன் பார்வதியை நோக்குவது போன்றும் கோடாக உருவங்கள் உள்ளன. பிராமணர் இடக்கையில் சுவடியையும் வலக்கையில் தாழைக் குடையையும் ஏந்தியவராகக் காட்சி தருகிறார்.

குறிப்பு : செப்புப்பட்டயத்தில் வாசகத்தில் காணப்பெறும் தடித்த எழுத்துக்கள் செப்புப் பட்டயத்தில் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருப்பவையாகும்.

———

# ஊ ர ா ய் வு

## 1. கீழ்பார்த்தவனூர் புத்தர் சிலைகள்

இவ்வூர் மானாமதுரை - பரமக்குடி நெடுஞ்சாலையில் சற்று ஒதுங்கி உள்ளது. இவ்வூருக்குப் பொழிலூர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவ்வூரிலுள்ள அழிந்த நிலையிலுள்ள பெருமாள் கோயிலும், சிவன் கோயிலும் பெருமாள், தேவி சிலைகளும் பிற்காலப் பாண்டியர் காலக் கட்டடக்கலைப் பாணிக்குச் சான்றாக உள்ளன.

இவ்வூர்த் திடல் ஒன்றில் முற்காலப் பாண்டியர் காலத்தினைச் சேர்ந்த இரண்டு புத்தர் கற்சிலைகள் உள்ளன. இதில் ஒன்று அமர்ந்த நிலையில் மார்பில் ஆடைக்கட்டுடனும் தலையில் முடிந்த முடிக்கட்டுடனும் விளங்குகிறது. மற்றொன்று வயிற்றுக்குக் கீழே உடைந்து காணப்படுகிறது. இவை தவிர புத்தர் சிலையிருந்த பீடம் ஒன்றும் உள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் புத்தமதம் பரவியிருந்த பகுதியாக இவ்வூர் இருந்திருத்தல் வேண்டும்.

## 2. ராங்கியம்

இவ்வூர் திருப்புவனத்திலிருந்து முக்குளம் செல்லும் வழியில் உள்ளது. இவ்வூரில் முற்காலப் பாண்டியர் காலத்தில் எடுக்கப் பெற்ற கண்மாய் ஒன்றும் உள்ளது. இது மிகப் பெரிய கண்மாயாக இருந்திருத்தல் வேண்டும். இக் கண்மாயில் சுமார் முப்பது அடி உயரம் கொண்ட மடைக்கற்கள் நடப்பெற்றுக் காணப்படுகின்றன. இக்கண்மாயின் மற்றொரு பகுதியில் முத்திடல் என்ற பழங்காலத் திடல் ஒன்று, ஊர் இருந்து அழிந்தமைக்கு அடையாளங்களைக் கொண்டு விளங்குகிறது. இப்பகுதியில் 1500 ஆண்டுகட்கு முற்பட்ட பானை ஓடுகள் கிடைக்கின்றன.

## 3. பாகனேரி

பாகனேரியிலுள்ள கண்மாய்ப் பகுதிகளை ஆய்வு செய்தபோது இவ்வூர்ச் சித்தாங்கண்மாயின் மடைக்கு அருகிலுள்ள இடத்தில் கி.பி. 1655-ஐச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று தனிக்கல்லில் பொறிக்கப் பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இக்கல்வெட்டு பாகனேரியை, பேலைத்திருத்தியூர் முட்டத்துப் பாகனேரி என்று குறிக்கிறது. இவ்வூரிலுள்ள மடம் ஒன்றிற்கு மடப்புறமாக அரியனயினார் காளையப்பப்பிள்ளை மகன் காளையப்பன், ஏந்தல் ஒன்றினைத் தானமாக அளித்ததைத் தெரிவிக்கின்றது. இவ்வேந்தலுக்கு உட்பட்ட நஞ்சை, புஞ்சை முதலிய சகலவிதமான சொத்துக்களும் இம்மடப்புறத் தன்மத்திற்கு விடப்பெற்று ஊராரும் நகரத்தாரும் இதனை நடத்தி வரவும் முடிவு செய்யப்பெற்றுள்ளது. மேலும் இக்கல்வெட்டில் பாகனேரி சண்டீசுரமுடையார், புல்வாயில் நாச்சியார் கோயில்கள் குறிப்பிடப்படுகின்றன.

**ஆய்வாளர் — வெ. வேதாசலம்,**
காப்பாட்சியர்,
தி. நா. அரண்மனை,
மதுரை.

★

AR

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயங்குநர்க்காக திருமதி மார்க்சியகாந்தி, கல்வெட்டாய்வாளர்
வெளியிடப்பெற்றது.